# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 382

சனி, 14 மார்ச், 2026 | பக்கங்கள் 15

www.ilakku.org




## இலங்கை சிக்கப்போகும் பொருளாதாரப் பொறி

விதுரன்



## ஹோர்முஸ் நீரிணை நெருக்கடி: இந்திய கப்பல்களுக்கு உருவான புதிய சவால்

ஆதி: சட்டவாளர் - தமிழ் நாடு



## அமெரிக்கா – ஈரான் போர்: உலகம் அறியாத சொல்லப்படாத உண்மைகள்!

காதர் மாஸ்டர்

# எரிபொருள் விடயத்தில் இலங்கையின் கோரிக்கைக்கு இந்தியா இணக்கம்



இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய, இந்தியாவிடம் விடுக்கப்பட்ட உதவி கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றங்கள் காரணமாக இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு, இந்தியாவிடம் இலங்கை விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

கடந்த 6ஆம் திகதி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் நடத்திய சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

போர் நீடிக்கும் பட்சத்தில் எரிபொருள் கையிருப்புகளைப் பெறுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்து அமைச்சர் விஜித ஹேரத் இதன்போது விரிவாக விளக்கமளித்தார். இந்நிலையில், இலங்கையின் இந்த வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமாகப் பதிலளித்துள்ளதாக அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது.

இதனையடுத்து, தேவையான எரிபொருள் இருப்புகளை உறுதி செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இரண்டு நாடுகளும் ஏற்கனவே ஆலோசிக்கத்

தொடர்ச்சி: பக்கம் 11

## திருச்சி சிறப்பு வதை முகாமில் உயிர் துறக்கும் நிலையில் யோகராசா நவநாதன்



திருச்சி சிறப்பு முகாமில் கடந்த முதலாம் திகதியிலிருந்து இன்றுவரை தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக ஈழத்தமிழரான யோகராசா நவநாதன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தமக்கு இதுவரை சரியான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'சென்னையில் உள்ள அதிகாரி ஒருவரிடம் நான் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு நீதிமன்ற உத்தரவுடன் என்னை விடுதலை செய்யுங்கள். வெளியில் இருந்து வழக்கை நான் பார்க்கின்றேன் என்று தெரிவித்தேன்.

நான் ஓடிவிடுவேன் என்று என்னை அடைத்து வைத்திருப்பதாக அவர் கூறினார். குற்றப்பத்திரிகை தாக்கல்

தொடர்ச்சி: பக்கம் 08

## இலங்கையில் நான்கில் ஒருவர் வறுமையில் இருப்பதாக அரசாங்கம் தெரிவிப்பு



இலங்கையின் மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 80 சதவீத மானோர் கிராமப்புறங்களில் வசிப்பதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

எனவே, வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் கிராம மட்டத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்

தொடர்ச்சி: பக்கம் 11

# ஈரானுக்கு எதிராக ஐ.நாவில் இந்தியா தீர்மானம்

அரபு நாடுகள் மீதான ஈரானின் சமீபத்திய தாக்குதல்களைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை அமெரிக்கா தலைமையில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா பாதுகாப்பு சபையில் (UNSC) இந்தியா கொண்டு வந்துள்ளது.

இந்த தீர்மானம் 13-0 வாக்குகளால் நிறைவேறியுள்ளது. ரஷ்யா மற்றும் சீனா மட்டுமே வாக்களிக்கவில்லை. பஹ்ரைன் தலைமையிலான இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், கனடா, ஜெர்மனி மற்றும் பாகிஸ்தான், எகிப்து போன்ற பல முஸ்லிம் நாடுகள் மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு சபையின் உறுப்பினர்கள் உட்பட 135 நாடுகள் ஆதரவளித்தன.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு விமான நிலையங்கள், எரிசக்தி நிறுவனங்கள், மற்றும் முக்கியமான சிவில் உள்கட்டமைப்பு உள்ளிட்ட நிலைகளை வேண்டுமென்றே குறிவைப்பதையும், ஹோர்முஸ் (Hormuz) நீரிணையில் வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களையும் இந்தத் தீர்மானம் கண்டித்துள்ளது.

"வணிகக் கப்பல் போக்குவரத்தில் இரண்டு இந்திய மாலுமிகளை இழந்துள்ளோம், ஒருவரைக் காணவில்லை," என்று வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் திங்களன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ச்சி: பக்கம் 14



## ஈரானிய பள்ளியில் 175 பேர் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா பெறுப்பேற்றுள்ளது?




ஈரானிய தொடக்கப்பள்ளியில் குறைந்தது 175 பேர் கொல்லப்பட்ட கொடிய டோமாஹாக் ஏவுகணைத் தாக்குதலுக்கு அமெரிக்கா முதன்மையாகப் பொறுப்பேற்றுள்ளது என்று நடந்து வரும் இராணுவ விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது, அவர்களில் பெரும்பாலோர் குழந்தைகள் என்று நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஷஜாரா தையேபே பெண்கள் பள்ளியின் மீதான பெப்ரவரி 28ம் திகதி தாக்குதல், ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதலின் முதல் நாளிலேயே நடந்தது, இதன் விளைவாக உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி மற்றும் பல மூத்த ஈரானிய தளபதிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதுவரை நடந்து

தொடர்ச்சி: பக்கம் 11

## ஐந்து மாதங்களில் 1 ட்ரில்லியன் டொலர்களை கடன் வாங்கிய அமெரிக்கா



அக்டோபர் மாதத்திலிருந்து ஐந்து மாதங்களில் அமெரிக்க அரசாங்கம் சுமார் 1 டிரில்லியன் டொலர்களை கடன் வாங்கியுள்ளது, இது அதிகரித்து வரும் கூட்டாட்சி பற்றாக்குறையை அதிகரிக்கிறது என்று காங்கிரஸின் பட்ஜெட் அலுவலகம் (CBO) தெரிவித்துள்ளது.

திங்களன்று(09), CBO அதன் மாதாந்த பட்ஜெட் மதிப்பாய்வை வெளியிட்டது, அதன்படி பெப்ரவரியில் மட்டும் அமெரிக்க அரசாங்கத்தின் கடன் 308 பில்லியன் டொலர்கள் அதிகரித்துள்ளது. இந்தப் போக்குக்கு பங்களிக்கும் காரணிகளில் பொதுக்கடனுக்கு சேவை

தொடர்ச்சி: பக்கம் 14

## இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை குறைத்த ஸ்பெயின்



இஸ்ரேலில் இருந்து தனது தூதரை ஸ்பெயின் நிரந்தரமாக திரும்பப் பெற்றுள்ளதுடன், அந்நாட்டுடனான இராஜதந்திர உறவுகளின் அளவை குறைத்துள்ளது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேலியப் போரின் போது மாட்ரிட் மற்றும் மேற்கு ஜெருசலேம் இடையே நீண்டகாலமாகப் பதற்றமடைந்த உறவுகள் மோசமடைந்துள்ளன.

இந்தத் தாக்குதல்களை கடுமையாகக் கண்டித்த ஒரே மேற்கத்திய நாடு ஸ்பெயின் மட்டுமே. "யாரோ ஒருவரின் பழிவாங்கலுக்கு பயந்து உலகிற்கு தீங்கு விளைவிக்கும் எதற்கும் தனது நாடு உடந்தையாக இருக்காது" என்று

தொடர்ச்சி: பக்கம் 13

# அடர்வனங்கள் அழிப்பு: மகாவலி அதிகாரசபைக்கு மரணதண்டனை வழங்க

### ரவிகரன் நா.உ வலியுறுத்து

மகாவலி அதிகாரசபையின் ஆதரவுடனேயே வவுனியா வடக்கு, திரிவச்ச குளம் பகுதியில் பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்த விவகாரத்தில் மகாவலி அதிகாரசபைக்கு மரணதண்டனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்தவிடம் வலியுறுத்தியுள்ளார்.



வவுனியா மாவட்டசெயலகத்தில் வியாழக்கிழமை (12) இடம்பெற்ற விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் தலைமையிலான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வவுனியா வடக்கு பிரசேசெயலாளர் பிரிவிலுள்ள திரிவச்ச குளம் என்னும் இடத்தில் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்ட விரோதமாக பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டன.

இலங்கையின் சட்டத்தின்படி காடுகளை அழிப்பதெனில் உரிய அனுமதிகள் பெறப்படவேண்டும். ஆனால். திரிவச்சகுளம் பகுதியில் அனுமதிகள் எவையும் பெறப்படாமல் 600ஏக்கருக்கும் மேற்பட்ட அடர்வனங்கள் அழிக்கப்பட்டன.

மகாவலி அதிகாரசபை தனது ஆளுகைக்குட்பட்ட இடம் என உரிமைகோரும் பகுதியிலேயே இவ்வாறு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மகாவலி அதிகாரசபையின் ஆதரவோடுதான் திரிவச்ச குளம் பகுதியில் இவ்வாறு அடர்வனங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழ் மக்கள் மண்வெட்டிப்பிடி வெட்டும்போது, காடழிப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நான்குவருடங்கள் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆனால் இங்கு பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இத்தகைய பாரிய சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கு இதுவரை எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்தோடு இவ்வாறு அடர்வனங்கள் அழிக்கப்பட்ட பகுதிக்கு அருகே உள்ள திரிவச்சகுளத்தின் கீழான தமிழ்மக்களின் பூர்வீக வயல் நிலங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் பத்துப்பேருக்கு ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு பகிர்ந்தளிக்கும் அத்துமீறல் செயற்பாட்டிலும் மகாவலி அதிகாரசபை ஈடுபட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக குறித்த தமிழ் மக்களின் பூர்வீக திரிவச்சகுளம் வயல் நிலங்களுக்கு அருகாகவுள்ள பாரிய அடர்வனங்களும் மகாவலி அதிகாரசபையின் துணையுடன் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள் ளன.

இந்த சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடு தொடர்பில் நான் நேரடியாகப் பார்வையிட்டதுடன், குறித்த சட்டவிரோத காடழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாவலி அதிகாரசபையிடம் வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால் அங்கு சட்டவிரோதமாக காடழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்ட பெரும்பான்மை இனத்தவர்களுக்கெதிராக இதுவரை எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சட்டவிரோத செயற்பாட்டில் யார் ஈடுபட்டாலும் அவர்களுக்கெதிராக மிகக் கடுமையான சட்டநடவடிககை எடுக்கப்பட வேண்டும். இந்தவிடயத்தில் மகாவலி அதிகாரசபை பாரிய சட்டவிரோத செயற்பாட்டிற்கு ஆதரவாகச் செயற்பட்டிருக்கின்றது.

எனவே அமைச்சர் லால்காந்த இவ்வாறு சட்டவிரோத காடழிப்புச் செயற்பாட்டிற்கு ஆதரவாகச் செயற்பட்ட மகாவலி அதிகாரசபைக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தில் தற்போதய அரசாங்கம் நியாயமான முறையில் செயற்படுமெனவும், உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமெனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த விடயத்தில் மகாவலி அதிகாரசபை மரண தண்டனைக்குரிய பாரிய குற்றச்செயலைச் செய்துள்ளது. பாரிய மரங்கள், பாரிய அளவில் அழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு காடழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்களும் எம்மிடமுள்ளன. எனவே இந்தவிடயத்தில் மகாவலி அதிகாரசபைக்கு மரணதண்டனை வழங்கப்படவேண்டும் என்றார்.

## ஆசிரியர் தலையங்கம் | 14 மார்ச், 2026

### ஈரான் இறைமையில் உறுதியின் உறைவிடமாக நிற்பதால் விழவிழ எழுமாற்றல் உள்ளதாக உள்ளது

அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் இனி ஈரானில் தாக்குவதற்கு ஏதுமில்லை என்பதால் தான் எந்நேரமும் தனது விருப்புப்படி தான் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று ஆணவமாகப் பேசினார். உடனேயே ஈரான் போரை முடிவுக்கு கொண்டு வருவது எங்கள் முடிவிலேயே உள்ளது எனப் பதிலளித்தது. இச்சூழ்நிலையில் ஈரானின் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் போர் மோதலை முடிவுக்குக் கொண்டு வர மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.

முதலாவது ஈரானின் இறையாண்மையும் மற்றும் உரிமைகளும் அனைத்துலக மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவது ஏற்படுத்தப்பட்ட இழப்புகளுக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்பட வேண்டும். மூன்றாவது எதிர்காலத்தில் இவ்வாறான ஆக்கிரமிப்புகள் அல்லது தாக்குதல்கள் மீண்டும் இடம்பெற மாட்டாது என்பதற்கான நிரந்தர அனைத்துலகப் பிணை மற்றும் உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும் இந்த ஈரான் ஜனாதிபதியின் நிபந்தனைகள் ஈரான் இறைமையில் உறுதியின் உறைவிடமாக நிற்பதையும் இந்த உறுதியால் விழவிழ எழுமாற்றல் உள்ளதாக விளங்குவதையும் உலகுக்குத் தெளிவாக்கின. உலக நாடுகள் அல்ல ஈரான் மக்களும் ஈரானின் இளைய சமுதாயமுமே ஈரானின் இந்த உறுதிக்கான பலமாகவுள்ளனர்.

ஆயினும் இந்த உறுதியின் உறைவிடம் - விழவிழ எழுவோம் என்னும் விருதுவாக்கியங்களை உலகிற்கு போர்முனையில் அறிமுகம் செய்த ஈழத்தமிழர்களால் கடந்த 17 ஆண்டுகளாகத் தங்களை உறுதியின் உறைவிடமாகவும் - விழ விழ எழும் ஆற்றல் உள்ளவர்களாகவும் ஏன் வாழ இயலாது போனது என்கின்ற கேள்வியை இலக்கு இந்நேரத்தில் முன்வைக்க விரும்புகிறது. இதற்கான பதிலைத் தேடினால் மக்களிடை உறுதியின் உறைவிடமாக உள்ளத்தை நிலைப்படுத்தும் சமூக உளவியல் தன்மையை ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் தங்கள் தேவையற்ற பேச்சுக்களாலும் தங்கள் இடையிலான இடைவிடாத உட்சண்டை மனப்பான்மையினாலும் நிலைகுலைத்து ஈழத்தமிழ் இளையவர்களுக்குத் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் எதிர்காலத்துக்கான வாழ்வைத் தரும் ஆற்றலில்லையென நாட்டை விட்டு வேறு நாடுகளுக்குச் சென்று வாழ விருப்புள்ள சமுதாயமாக மாற்றியுள்ளது.

இதனால் எந்த இளைய சமுதாயம் தங்கள் மண்ணில் நிகழ்த்தப்பட்ட ஈழத்தமிழின அழிப்புக்கான நீதியை பெற உழைக்க வேண்டுமோ, எந்த இளையவர்கள் தங்களின் தேசிய பிரச்சினைக்குத் தாங்களே தீர்வை சனநாயக வழிகளில் உருவாக்க வேண்டுமோ அந்தப் பணியினைத் தாங்கள் செய்ய வேண்டுமென்ற விழிப்புணர்வு அற்றவர்களாக சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்திக்குள் உள்வாங்கப்படும் தன்மையுள்ளவர்களாக இன்று விளங்குவதே கடந்த 17 ஆண்டுகளாக சனநாயக வழிகளில் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் நகர இயலாதிருப்பதற்கான முக்கியமான காரணமாகவுள்ளதென்பதை ஈரான் போர் தெளிவாக்கியுள்ளது. இனியாவது ஈழத்தமிழர்கள் தங்கள் மக்களையும் தங்கள் இளைய சமுதாயத்தையும் மையப்படுத்தி தங்களின் சனநாயக வழியிலான தேசிய விடுதலைப்போராட்டத்தைத் தொடர முயற்சிக்க உலக இனமாகத் உலகில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் முயற்சிக்க வேண்டுமென்பது இலக்கின் அழைப்பாக உள்ளது.

மேலும் இந்த சமகால உலக நிகழ்வுகள் அனைத்துலக அரசியலில் ஆயுத பலம் கொண்டு இறைமையுள்ள மக்களை எந்த வல்லாண்மையாலும் பிராந்திய மேலாண்மையாலும் அடக்க இயலாது என்பதற்கு அமெரிக்க வல்லாண்மையும் இஸ்ரேல் என்னும் பிராந்திய மேலாண்மையும் இன்றைய உதாரணங்களாக நிற்கின்றன என்பதைத் தெளிவாக்கியுள்ளது. மத்திய கிழக்கின் பாதுகாப்பும் பொருளாதாரமும் மத்திய கிழக்கில் பிறநாட்டுப் படைத்தளங்கள் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக மிகுந்த சிக்கல்களைச் சந்தித்துள்ளன. அதே நேரத்தில் சீனா மத்திய கிழக்கை தனது எரிபொருள் தேவைசார் நிலையில் அணுகுவதையும் ரஷ்யாவும் அதே நோக்கிலேயே உள்ளது என்பதையும் அண்மைக்கால ஈரானின் உட்கட்டுமானங்களில் ஏற்பட்டுள்ள பாரிய இழப்புகள் உலகிற்குத் தெளிவாக்கியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் பிரித்தானியாவும் அவுஸ்திரேலியாவும் கூட ஸ்பெயினைத் தவிரத் தங்கள் தங்கள் நாடுகளின் பாதுகாப்பு அமைதி மற்றும் வளர்ச்சிகளுக்கு எவற்றைச் செய்யலாம் என்கின்ற நோக்கிலேயே படைநகர்வுகளையும் படைக்கல நகர்வுகளையும் நடத்தி வருகின்றனவே தவிர ஈரானின் மக்களின் உயிர் உடமைகள் நாளாந்த வாழ்வுக்கான பாதுகாப்பு என்பது குறித்து எந்த விதமான அக்கறையையும் காட்டவில்லை. இவற்றைச் சான்றாதாரமாகக் கொண்டு நோக்குகையில் 21ம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான இனஅழிப்பாக 146000க்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனஅழிப்புச் செய்து ஈழத்தமிழர்களின் 31 ஆண்டுகால அவர்களின் உயிருக்கும் உடலுக்கும் உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் பாதுகாப்பான விளங்கிய அவர்களின் நடைமுறை அரசின் அனைத்து உட்கட்டுமானங்களையும் தாக்கியழித்த சிறிலங்காவின் அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்கான நீதியை எவ்வாறு இந்த அனைத்துலக சமூகம் வழங்குமென்கின்ற கேள்வியை இலக்கு முன்வைக்க விரும்புகிறது.

அவ்வாறே இன்றும் ஈழத்தமிழர்கள் தங்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வை இந்த அனைத்துலக நாட்டவர்கள் புதிய அரசியலமைப்பொன்றைச் சிறிலங்கா உருவாக்கச் செய்து தீர்த்து வைப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்பதும் அடுத்த கேள்வியாக உள்ளது. ஆயினும் ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு 17 ஆண்டுகள் இந்த இரண்டு நோக்குகளையுமே அதாவது ஒன்று அனைத்துலக நீதியைப் பெறல் அடுத்தது அனைத்துலக தீர்வைப் பெறல் எனக் காலத்தையும் உழைப்பையும் வீணடித்து ஈழத்தமிழர்களுக்கான எந்தவொரு சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலையைக் கூட நடைமுறையில் பெற இயலாதவர்களாக உள்ளனர் என்பதே நடைமுறை எதார்த்தமாகவுள்ளது. இதுவே ஈழத்தமிழர்களின் இளைய சமுதாயத்தினர் தங்கள் சொந்த மண்ணில் தங்களுக்கான எதிர்காலம் இல்லை என்ற மனநிலைக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறி வாழ முயற்சிப்பதற்குக் மூல காரணமாக உள்ளது.

இவ்வாறான சூழலில் எவ்வாறு ஈழத்தமிழரின் இளைஞர்களிடையே அவர்கள் தங்களின் காலனித்துவத்தால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் இறைமை தங்களிடம் 22.05. 1972இல் மீண்டு அரசற்ற தேச இனமாகத் தாங்கள் வாழ்கின்ற தங்களின் வரலாற்றுத் தாயகமான, இலங்கையின் மட்டக்களப்பு யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மூதூர், அம்பாறை மாவட்டங்களில் யாராலும் பிரிக்க இயலாத தங்களின் தன்னாட்சி உரிமையாக உள்ளதென்ற அடிப்படையில் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை உருவாக்க இயலும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றோமோ அவ்வளவு விரைவில்தான் ஈழத்தமிழர்களின் தாயகம் தனது இறைமையை மீளுறுதி செய்ய இயலும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

இதற்கு ஈழத்தமிழர்கள் இடையான வேகமான ஒன்று தொடர்பாடல் முறைமைகளும், இரண்டு ஆட்களினதும் பொருட்களினதும் போக்குவரத்து முறைமைகளும் மூன்று அனைத்துலக இனமாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் மதியும் நிதியும் என்னும் முத்தள இணைப்புக்களும் ஒருங்குபடுத்தப்பட்ட சமூகமாக ஈழத்தமிழர்கள் நாளாந்தம் செயற்படும் நிலை உருவாக்கப்பட்டாலே ஈழத்தமிழ் இளையவர்கள் தங்கள் மண்ணில் வாழ்வதற்கான கல்வி மற்றும் தொழில்நுட்ப செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகள் தொழில்முயற்சிகள் வர்த்தக முயற்சிகள் நடைமுறைச்சாத்தியமாகி ஈழத்தமிழ் இளையவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் சந்தைகள் அனைத்துலக நிலையில் இணைப்புற்று அவர்கள் தங்கள் வாழ்வினை தங்கள் தாயகத்தில் வாழ்வதற்கான வளத்தையும் பலத்தையும் பெறுவார்கள் என்பதே இலக்கின் உறுதியான எண்ணம்.

இவ்வாறான தாயக உலக ஈழத்தமிழின இணைப்புக்கு உள்ள சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக தடைகள் ஏராளம் என்பதை இலக்கு மறுக்கவில்லை ஆனால் அவற்றை எவ்வாறு கடந்து செல்வது என்பதே இன்றுள்ள கேள்வி. முதல் சவால் வெறுமனே அரசியல் பேசும் ஊடகங்களாக ஈழத்தமிழர்களின் ஊடகங்கள் மாறிவிட்ட தன்மையையும் இதனைச் சமுக ஊடகத்தினர் தங்கள் வருமானப் பெருக்கத்திற்கும் சமுதாயம் மேலான ஆட்சிப்படுத்தலுக்கும் பயன்படுத்தும் நிகழ்நிலை தன்மையையும் எப்படி மாற்றுவது? அடுத்த சவால் இலங்கையின் மற்றைய இனத்தவர்களிலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட இனமாகவும் இந்தியத் துணைக்கண்ட மக்களிடம் இருந்தும் உலக மக்களிடம் இருந்தும் தனிமைப்படுத்தப்பட்ட மனநிலையிலும் தங்களுக்குள் தாங்களே கருத்து மோதல்களும் முரண்பாடுகளும் வளர்த்து வாழும் வாழ்வை எப்படி மாற்றுவது? இதற்கு ஒரே வழி ஈழத்தமிழினத்திற்கு சக்தியளிக்கக் கூடிய வகையில் அறிவூட்டல் வழி அறியாமையை நீக்கலும் பொருளாதாரத் திட்டமிடல்களை உருவாக்குவதன் வழி வறுமையை நீக்குவதும் தான். இவற்றைச் செய்ய வல்ல பலமிக்க சிவில் சமூகங்களையும், அதற்கு உழைக்க வல்ல ஊடகத்தினையும் அனைத்துலக ஈழத்தமிழினம் உருவாக்க உழைக்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வாரச் சிந்தனையாகவுள்ளது. இதுவே இன்றைய உலக மாற்றத்தை எதிர்கொண்டு ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை மீளுறுதி செய்ய உதவும் என்பது இலக்கின் உறுதியான நம்பிக்கை.

**ஆசிரியர்**

# இலங்கை சிக்கப்போகும் பொருளாதாரப் பொறி

விதுரன்



ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடுத்த போர், உலகளாவிய ரீதியில் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், 2022ஆம் ஆண்டில் பொருளாதார வங்குரோத்து அடைந்ததிலிருந்து மீண்டு வரத் தொடங்கியிருக்கும் இலங்கையை மீண்டுமொரு 'பலவீனமான சவால் மிக்க தருணத்ததுக்குள்' தள்ளியிருக்கிறது.



2026 பெப்ரவரி 28 அன்று அதிகாலை இலங்கையில் விடிந்தபோது, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானின் மூலோபாய இலக்குகள் மீது நேரடி இராணுவத் தாக்குதல் நடத்தியிருந்தன. இந்தத் தாக்கு தல்கள் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் ஏவுக ணைத் தளங்களை இலக்காகக் கொண்டிருந்தன.



இதற்குப் பதிலடியாக ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்கள் குவைத், கட்டார், பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்களைச் சிதைத்ததுடன், உலகின் 20சதவீதமான எண்ணெய் விநியோகத்தைத்தினை கையாளும் ஹோர்முஸ் நீரிணையை முடக்கியது.

இலங்கை பொருளாதார ரீதியாகவொரு தற்சார்பு நாடு அல்ல என்பதாலும், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுகின்ற நாடு என்ற வகையிலும், சர்வதேச பொருளாதார மாற்றங்களின் தாக்கங்களில் இருந்து ஒருபோதும் விடுபட முடியாத நிலையில் உள்ளது.

இப்போர் தொடங்கிய உடனேயே சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 7சதவீதமாக உயர்ந்து. குறிப்பாக 90 அமெரிக்க டொலர்களைத் தாண்டியதுடன், ஒரு வாரத்துக்குள் 100 டொலரை எட்டியது.

2022 உக்ரைன் போருக்குப் பிறகு முதன்முறையாக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையானது100 டொலரைத் உயர்ந்து இதுவே முதற்தடவையாகும். இவ்வாறான நிலையில், போர் தொடங்கிய பத்தாவது நாளில் இலங்கை அரசாங்கம் எரிபொருள்களின் விலையை அதிரடியாக உயர்த்தியது.

சாதாரண மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் ஒக்ரேன் 92 பெற்றோல் லிற்றர் ஒன்றுக்கு 24ரூபாவினாலும் (7.57சதவீதம்), சாதாரண டீசல் 22 ரூபாவினாலும் (7.26சதவீதம்) உயர்த்தப்பட்டுள்ளது. ஒக்ரேன் 95 பெற்றோல் 25ரூபாவினாலும், சுப்பர் டீசல் 24 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மண்ணெண்ணெய் விலை 13 ரூபாவினாலும்; (6.66சதவீதம்) உயர்த்தப்பட்டிருக்கிறது.



விவசாயம் மற்றும் மீன்பிடிக்கு அவசியமான மண்ணெண்ணெய் மற்றும் சாதாரண டீசல் விலை உயர்வு மக்களின் வாழ்க்கையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மக்களின் அரசாங்கம் எனக் கூறுகின்ற ஒரு நிர்வாகம், சாதாரண மக்களின் நிலையில் இருந்தே இதுபற்றி முடிவெடுத்திருக்க வேண்டும்.

போர் தொடங்கிய பின்னர் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 27 நாட்களுக்குத் தேவையான பெற்றோலும், 33 நாட்களுக்குத் தேவையான டீசலும் கையிருப்பில் இருப்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால் போர் தொடங்கியதும் ஏற்பட்ட விநியோகக் குளறுபடிகளை கியூ.ஆர் குறியீட்டு முறை மூலம் தீர்க்க அரசாங்கம் முன்வரவில்லை. ஒரு மாதத்துக்கு போதுமான எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகக் கூறிவிட்டு, 10 நாட்களுக்குள்ளேயே விலைகளை அதிகரித்திருப்பது அரசாங்கத்திற்கு மேலதிகமாக ஏழு சதவீத இலாபத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

ஏற்கனவே குறைந்த விலையில் கொள்வனவு செய்து சேமிக்கப்பட்ட எரிபொருளை, கூடிய விலையில் விற்பனை செய்து அரசாங்கமும் லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் போன்ற நிறுவனங்களும் பெரும் இலாபம் ஈட்டி வருகின்றன.

இந்த விலை உயர்வுக்கு அரசாங்கத் தரப்பில் முரண்பாடான காரணங்கள் சொல்லப்படுகின்றன. அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, மார்ச் 1 முதல் 9 ஆம் திகதி வரை 59,200 மெற்றிக் தொன் டீசலும் 47,500 மெறறிக் தொன் பெற்றோலும் நுகரப்பட்டதால் கையிருப்பு தீர்ந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.



ஆனால், பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூரு நெத்தி குமாரகே, 30 நாட்களுக்கான கையிருப்பு இருந்த போதிலும் வருங்கால கப்பல்களின் விலையேற்றத்தை சமநிலைப்படுத்தவே விலையை உயர்த்தியதாகக் கூறியுள்ளார்.

அமைச்சர் நளிந்தவின் தரவுகளின்படி பார்த்தால், தினசரி 4,000 மெற்றிக் தொன் நுகரப்படுகின்றதன் அடிப்படையில் மாதமொன்றுக்கான கையிருப்பு என்பது 120,000 மெற்றிக் தொன் ஆகும்.

அதில் 9 நாட்களில் பாதியளவு கூட தீர்ந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியானால் மாதமொன்றுக்கு கையிருப்பு இருப்பதாக ஜனாதிபதி கூறியது பொய்யாக இருக்க வேண்டும் அல்லது கையிருப்பு தீராமலேயே தீர்ந்துவிட்டதாக பிறிதொரு வடிவத்தில் பொய் கூறப்பட்டிருக்க வேண்டும்.

இப்பொருளாதாரத் தாக்கம் எரிபொருளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இலங்கையின் அந்நியச் செலாவணிக்கு முதுகெலும்பாக விளங்கும் 1.5 மில்லியன் புலம்பெயர் தொழிலாளர்களின் நிலைமை கேள்விக்குறியாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் 8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த தொழிலாளர் வருமானம் போர்ச் சூழலால் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வளைகுடா நாடுகளில் போர் தீவிரமடைந்தால் புதிய வேலைவாய்ப்புகள் நிறுத்தப்படும் மற்றும் அங்குள்ளவர்கள் அவசரமாக நாடு திரும்ப நேரிடும்.



இது இலங்கையின் வேலையின்மைப் பிரச்சினையை அதிகரிப்பதுடன், டொலருக்கு நிகரான ரூபா யின் மதிப்பை வீழ்ச்சியடையச் செய்து மீண்டுமொரு பொருளாதார சரிவுக்கு வழிவகுக்கும்.

மேலும், சுற்றுலாத்துறையில் 60சதவீதத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் துபாய் மற்றும் டோஹா ஊடாகவே இலங்கை வருவதால், விமான சேவைகள் இரத்து மற்றும் வான்பரப்பு மூடலால் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஏற்கனவே 20சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

வர்த்தகத் துறையில், இலங்கையின் தேயிலையின் முக்கிய கொள்வனவாளர்களான ஈரான், ஈராக் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துடனான வர்த்தகம் ஈரானிய ரியால் வீழ்ச்சியாலும் வங்கிச் சிக்கல்களாலும் ஸ்தம்பித்துள்ளது.

சுயஸ் கால்வாய் வழித்தடம் பாதிக்கப்பட்டுள்ளதால்

தொடர்ச்சி: பக்கம் 07



# ஈரான்,அமெரிக்க போரினால் பொருளாதார நெருக்கடி வடகிழக்கு மக்களுக்கும் ஏற்படும்.!

பா.அரியநேத்திரன்

கடந்த மாதம் 2026 பெப்ரவரி 28 அன்று ஈரான் மீதான அமெரிக்கா இஸ்ரேல் கூட்டுத் தாக்குதலுடன் ஆரம்பமாகி தற்போதைய ஈரான் மோதல் தீவிரமடைந்து 15 நாட்கள் கடந்தும் தொடர்கிறது.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வர வேண்டிய இந்த சூழலில் , இந்த போர் இன்னும் நெருக்கடியை அதிக ரித்துள்ளது. இவ்வாறான சூழலில் இதனை எதிர்கொள்வது சிக்கலானது. இத்தகைய நிலையில் மத்திய கிழக்கில் போர் நிலைமைகள் மோசமடைந்து அங்குள்ள 15 இலட்சம் இலங்கை தொழிலாளர்களை திருப்பி அழைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமேயானால், அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அவ்வளவு பேரையும் நாட்டுக்கு கொண்டு வந்து சேர்ப்பது கூட இலங்கையினால் இயலாத காரியமாகவே இருக்கும்.



மத்திய கிழக்கில் பணிபுரிகின்ற இலங்கையர் அனுப்புகின்ற பண வருவாய் குறைவதற்கான சாத்தியமுள்ளது. தொழில் இழப்புகளும் ஏற்படலாம். இது உள்நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மத்தியகிழக்கில் வடக்கு கிழக்கை சேர்ந்தவர்களே அதிகளவில் தொழிலுக்காக சென்றுள்ளனர். ஈரான் நாட்டை பொறுத்தவரை கடந்த 2006ல் திருகோணமலை மாவிலாற்றில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்கும் போர் ஆரம்பமாகி 2010 காலப்பகுதி வரை நடந்த இலங்கை உள்நாட்டு போரின் இறுதி கட்டத்தில் ஜனாதிபதி மகிந்தராஷபக்ஷ தலைமையிலான இலங்கை அரசாங் கத்திற்கு பல வெளி நாடுகள் ஆதரவு வழங்கின. அவற்றில் ஈரான் வழங்கிய ஆதரவு இராணுவம், பொருளாதாரம் மற்றும் தூதரகம் ஆகிய மூன்று துறைகளிலும் காணப்பட்டதாக அப்போது கூறப்பட்டன.

சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வழங்கிய அளவுக்கு பெரியதாக இல்லாவிட்டாலும், குறிப்பாக பொருளாதார மற்றும் எரிசக்தி உதவிகளில் முக்கிய பங்கை ஈரான் வகித்தது.

இராணுவ மற்றும் பாதுகாப்பு ஆதரவு, ஆயுத விற்பனை மற்றும் இராணுவ உபகரணங்கள், 2007ஆம் ஆண்டு சுமார் 140 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஆயுத ஒப்பந்தம் இலங்கை மற்றும் ஈரான் இடையே நடைபெற்றதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இதற்கு முன்பும் 2000ம் ஆண்டின் நடுப்பகுதியில் சுமார் 150 மில்லியன் டொலர் மதிப்புள்ள இராணுவ உபகரணங்கள் வழங்கப்பட்டதாக தகவல்கள் உள்ளன. ஈரான், இலங்கைக்கு இராணுவ உபகரணங்களை வாங்க கடன் வசதிகளையும் வழங்கியது.

இதன் மூலம் கண்காணிப்பு விமானங்கள்,மனிதர் இல்லா விமானங்கள், போரின் இறுதி கட்டத்தில் தகவல் சேகரிப்பு மற்றும் கண்காணிப்பு திறனை அதிகரிக்க உதவின.இராணுவ பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இலங்கை இராணுவ அதிகாரிகள் ஈரானில் பயிற்சி பெற்றதாக அப்போதைய தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக கடற்படை தொடர்பான சிறிய வேகப் படகுகள் பயன்படுத்தும் போர்த் தந்திரங்கள் போன்றவற்றில் ஒத்துழைப்பு இருந்ததாக அறியமுடிந்தது. ஈரான் வழங்கிய மிக முக்கியமான உதவி பொருளாதார மற்றும் எரிசக்தி துறையில் இருந்தது. எண்ணெய் வழங்கல், 2008ஆம் ஆண்டு மட்டும் சுமார் 1.05 பில்லியன் அமெரிக்க டொலர்மதிப்புள்ள கச்சா எண்ணெய் இலங்கைக்கு கடன் முறையில் வழங்கப்பட்டது. இது போரின் போது இலங்கை பொருளாதாரம் மற்றும் இராணுவத்தின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய உதவியது.

மொத்தத்தில் சுமார் 1.9 பில்லியன் டொலர் வரை கடன் வசதிகளை ஈரான் வழங்கியது. தற்போது ஈரானுக்கு எதிராக மோதலைத் தொடரும் அமெரிக்கா,இஸ்ரேல், நாடுகளும் இலங்கைக்கு இறுதிப் போரில் உதவியது என்பது உண்மை.

இலங்கை வடகிழக்கை பொறுத்தவரை தற்போது ஈரான், அமெரிக்கா மோதல்களால் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை செலுத்தும் என்பது ஒருவிடயம்.

அடுத்ததாக ஐ நா மனித உரிமை பேரவையின் 61வது கூட்டத்தொடர் ஆரம்பமாகும் இவ்வேளையில் ஈழத் தமிழர்களுடைய விடயம் முக்கியத்துவம் பெறுமா என்பதும் சந்தேகமாகவே உள்ளது. தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை வடகிழக்கு மக்களுடைய பொருளாதாரம், அரசியல் தீர்வு விடயங்களை கையாள்வதற்கான கூட்டு ஒற்றுமை இல்லை என்பதால் பெரும்பாலான தமிழ்த்தேசிய கட்சிகளின் குறியானது எப்படியும் வடமாகாணசபை தேர்தலிலும், கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் ஆசனங்களை எடுப்பதும் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கான அழுத்தம் கொடுக்கும் செயல்பாடுகளில் மட்டுமே கூடிய கவனம் செலுத்துகின்றது. தற்போதைய அநுர அரசு புதிய அரசியல் யாப்பை தயாரிக்கும் என்ற பகல் கனவுடன் அதற்காக ஆளுக்கொரு தீர்வுத்திட்டத்தை தயாரிக்கும் கலந்துரையாடல்களை நடத்தி வருவதையும் காணலாம்.

தற்போதைய ஈரான், அமெரிக்கா போர் மத்திய கிழக்கின் பதட்டம் அதுதொடர்பாக வடகிழக்கு மக்களுக்கான ஆலோசனை பொருளாதாரத்தை ஈடுசெய்யும் விதமான விழிப்பூட்டல்களை எந்த ஒரு கட்சிகளும் இதுவரை முன்எடுக்ககூடிய ஆயத்தங்கள் எதுவுமே செய்யக்கூடிய மனோநிலையில் இல்லை.

இலங்கையில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு இலங்கை அரசுதான் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் சகல அரசியல் கட்சிகளும் உள்ளன என்பதே உண்மை.



இலங்கை ஜனாதிபதியின் விசேட பொருளாதார குழு கூடி தற்போது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலினால் ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார ஸ்திரமற்ற தன்மையால், இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புகள் மற்றும் அந்த நிலைமையில் சந்தை நிலைமையை ஸ்திரப்படுத்தல் மற்றும் பிரஜைகளின் பாதுகாப்புக்கு மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கை குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

ஒரு சிறிய திறந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடு என்ற ரீதியில், வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணப் பரிமாற்றம் மற்றும் அந்த வலய நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகள் மற்றும் முதலீடு என்பவற்றிலே எரிபொருள் இறக்குமதி தங்கியுள்ளது. அதனால் இலங்கைக்கு வெளிப்புற பொருளாதார அதிர்வுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் எச்சரிக்கை மற்றும் அவற்றை தொடர்ச்சியாக கண்காணித்து மேற்கொள்ள வேண்டிய முக்கியமான கொள்கை ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

எதிர்கட்சி தலைவர் சஜித்தினால் அவசர இராஜதந்திர சந்திப்பு இடம்பெற்று. மத்தியகிழக்கில் ஏற்பட்ட போர் சூழல் தொடர்பாக ஆராயப்பட்டும் உள்ளது. ஆனால் வடகிழக்கில் உள்ள தமிழ்தேசிய கட்சி தலைமைகள் இது தொடர்பாக எந்த அக்கறைகளையும் காட்டவில்லை என்பதே உண்மை.

• • •



# அமெரிக்கா – ஈரான் போர்: உலகம் அறியாத சொல்லப்படாத உண்மைகள்!

**மத்திய கிழக்கில் ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே தற்போது நடைபெற்று வரும் போர் சூழல், உலக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்தப் போரின் பின்னணியில் உள்ள சொல்லப்படாத உண்மைகள், அமெரிக்காவின் போர் வரலாறு மற்றும் ஈரானின் புவிசார் அரசியல் பலம் குறித்து விரிவாக ஆராய்கிறது இந்த நேர்காணல். இதில் ஆய்வாளர் காதர் மாஸ்டர் அவர்கள் கலந்துகொண்டு பல முக்கியத்தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறார்.**

**கேள்வி :**

**தற்போதைய ஈரான் - இஸ்ரேல் போர் சூழலில் தகவல்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன? குறிப்பாக இஸ்ரேல் தரப்பில் என்ன நடக்கிறது?**

**பதில் :**

தற்போதைய போர் சூழலில் இஸ்ரேல் அரசு தனது நாட்டு மக்களுக்குக் கடுமையான சட்டங்களைப் பிறப்பித்துள்ளது. போரினால் இஸ்ரேலுக்குள் ஏற்படும் பாதிப்புகள் எவையும் சமூக ஊடகங்களில் வெளியாகக் கூடாது என்றும், மீறுபவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அங்கிருந்து கசியும் தகவல்களின்படி, இஸ்ரேல் காசாவை எவ்வாறு தரைமட்டமாக்கியதோ, அதே போன்ற ஒரு இக்கட்டான நிலையில் தற்போது டெல் அவிவ் நகரம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் போரை உண்மையில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுதான் ஈரானுக்கு ஏவுகணைகளை அனுப்பித் தொடங்கி வைத்தார். ஆனால், மேற்கத்திய ஊடகங்கள் பலவும் உண்மையை மறைத்து அமெரிக்காவிற்குச் சேவை செய்யும் விதமாகவே செய்திகளை வெளியிடுகின்றன. இன்றைய காலகட்டத்தில் செயற்கைக்கோள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற தொழில்நுட்பங்கள் வளர்ந்து விட்டதால், போரின் உண்மைகளை முழுமையாக மறைக்க முடியாது என்றாலும், பழைய காணொளிகளை மாற்றி அமைத்துப் போலியான செய்திகளைப் பரப்பும் குழப்பமான நிலையும் நீடிக்கிறது.

**கேள்வி :**

**அமெரிக்காவின் போர் வரலாறு மற்றும் அதன் ஆயுத உற்பத்திப் பின்னணி பற்றி உங்கள் பார்வை என்ன?**

**பதில் :**

அமெரிக்கா இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஒரு வல்லரசாக உருவெடுத்தது. ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுதங்களை விற்ற ஒரு ஆயுத வியாபாரியாகவே அது முன்னுக்கு வந்தது. அமெரிக்காவின் பொருளாதாரம் பெரும்பாலும் ஆயுத உற்பத்தியைச் சார்ந்தே இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ஜான்சன் தனது பிரியாவிடை உரையில், ஆயுத உற்பத்தியைத் தனியார் வசம் ஒப்படைத்திருப்பது உலகை எங்கே கொண்டு போய்விடுமோ என்று கவலையோடு எச்சரித்தார்.

அமெரிக்காவின் போர் வரலாற்றைப் பார்த்தால், அவர்கள் கொரியப் போர் முதல் வியட்நாம், ஆப்கானிஸ்தான் என எதிலுமே நேரடியாக மோதி வெற்றி பெற்றதில்லை. ஈராக் போரின் போது 'உலகை அழிக்கும் அணு ஆயுதங்கள்' (WMD) இருப்பதாகப் பொய்க் காரணத்தைச் சொல்லியே போரைத் தொடங்கினார்கள்.

அமெரிக்கா பெரும்பாலும் தனது இராணுவ பலத்தால் வெல்வதை விட, சதித்திட்டங்கள் (Conspiracy) மற்றும் ராஜதந்திரம் என்ற பெயரில் மேற்கொள்ளும் சூழ்ச்சிகள் மூலமாகவே சோவியத் யூனியன் சிதைப்பு போன்றவெற்றிகளைப் பெற்றுள்ளது.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**ஈரானின் பலம் மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணி என்ன? ஏன் ஈரானை யாராலும் எளிதில் வீழ்த்தமுடியவில்லை?**

**பதில் :**

ஈரானுக்கு 2500 ஆண்டுகள் பழமையான பாரசீக நாகரிக வரலாறு உண்டு. உலகிலேயே முதல் மனித உரிமைச் சாசனமான 'சைரஸ் சிலிண்டர்' வழங்கிய பெருமை ஈரானுக்குரியது. புவியியல் ரீதியாக ஈரான் மிகவும் வலிமையானது.

ஜக்ரோஸ் (Zagros) மற்றும் அல்பரோஸ் (Alborz) ஆகிய இரண்டு பிரம்மாண்ட மலைத்தொடர்கள் ஈரானுக்கு இயற்கை அரணாக உள்ளன. இமயமலை போன்ற இந்த மலைகளுக்கு அடியில்தான் அவர்கள் ஆயுதக் கிடங்குகளை வைத்துள்ளனர், எத்தகைய குண்டுகளாலும் அவற்றைத் துளைக்க முடியாது. மேலும், ஈரான் மீது நீண்டகாலமாகத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் எரிபொருளை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள முடிவதால் அவர்களால் தனித்து வாழ முடிகிறது.

சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கூட எரிபொருளுக்காக வெளிநாடுகளை நம்ப வேண்டியுள்ளது, ஆனால் ஈரான் உலகிற்கே எரிபொருள் வழங்கும் நாடாக இருக்கிறது. ஈரானை ஆக்கிரமிப்பது என்பது வரலாற்றில் யாராலும் முடியாத காரியமாகவே இருந்து வருகிறது.

**கேள்வி :**

**ஈரானில் மதவாத ஆட்சிக்கும் அதன் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் என்ன தொடர்பு?**

**பதில் :**

பொதுவாக மதவாத அரசாங்கங்கள் பிற்போக்கானவை மற்றும் மனித குலத்திற்கு ஆபத்தானவை என்பதில் சந்தேகமில்லை. ஈரானிலும் மதக் கட்டுப்பாடுகள் சுதந்திரத்தை நசுக்குகின்றன. இருப்பினும், ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுடன் ஒப்பிடும்போது ஈரானில் தேர்தல் முறையும், கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியும் சிறப்பாக உள்ளன. 1953-இல் ஈரானின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிக்க அமெரிக்காவின் சிஐஏ (CIA) மற்றும் பிரிட்டன் இணைந்து நடத்திய சதிக்குப் பின், ஈரான் தனது தேசிய வளங்களைப் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது. மதத்தலைவர்கள் ஆட்சியில் இருந்தாலும், அவர்களின் பண்டைய பாரசீக வரலாறும் நிர்வாக முறையும் இன்றும் அந்தநாட்டை வலிமையாகக் கொண்டு செல்ல உதவுகின்றன.

**கேள்வி :**

**தற்போதைய போரில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் உத்திகள் என்ன? அவை வெற்றி பெற்றுள்ளனவா?**

**பதில் :**

அமெரிக்காவும் இஸ்ரேலும் வான்வழித் தாக்குதல்களை நடத்தி, ஈரானில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று கணக்கு போட்டன. குறிப்பாக குர்திஷ் மக்களைப் பயன்படுத்தி ஈரானுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றனர். டொனால்ட் ட்ரம்ப் ஒரு வியாபாரி என்பதால் அவருக்குப் பெரிய அரசியல் பின்னணி இல்லை; அவர் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் பேச்சைக் கேட்டு இந்தப் போருக்கு உடன்பட்டார். ஆனால், முன்புபோல ஈரானுக்குள் ஊடுருவிச் சதி வேலைகளைச் செய்வது தற்போது இஸ்ரேலுக்குக் கடினமாகியுள்ளது.

மேலும், ஸ்பெயின் மற்றும் ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் திட்டங்களுக்கு

தொடர்ச்சி: பக்கம் 13

# தமிழ் தேசிய இருப்பிற்கு ஆபத்து!



தமிழர்கள் தாங்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுடன் கடந்த 76வருடத்திற்கும் மேலாக போராடிய ஒரு இனமாக இருந்து வந்துள்ள நிலையில் அந்த போராட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் எதனை அடைந்தார்கள்,இன்று தமிழ் மக்கள் என்ன நிலைமையில் உள்ளார்கள்,தமிழர்கள் எதிர்கொண்ட இழப்புகளினால் அடைந்த பலன் என்ன என்ற பல்வேறு கேள்விகள் இன்று வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள நிலைமையினை காணமுடிகின்றது.

இன்று வடகிழக்கில் எழுந்துள்ள அரசியல் நிலைமை என்பது வடகிழக்கு தமிழ் மக்களுக்கான ஆபத்தினை வெளிப்படுத்தி நிற்பதுடன் அது வடகிழக்கு தமிழ் மக்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கும் என்பதுடன் தமிழ் தேசிய இருப்பிற்கும் பாரிய ஆபத்தானதாக மாறி வருகின்றது.

வடகிழக்கில் தமிழ் மக்களின் பலமிக்க ஆயுதக் கட்டமைப்பு மௌனிக்கப்பட்டதன் பின்னர் எழுந்த அரசியல் ரீதியான இராஜதந்திரபோரானது இன்று கட்சி ரீதியாகவும் பதவி ரீதியாகவும் பிளவடைந்து தமிழ் தேசிய அரசியலை கேள்விக்குள்ளாக்கிவருகின்றமை ஆபத்தான நிலைமை என்பதை அனைவரும் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

வடகிழக்கினைப்பொறுத்த வரையில் ஏதோ ஒரு பலம்தான் எப்போதும் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டினை தாங்கியவாறும் பாதுகாத்தவாறும் இருந்து வருகின்றது. தமிழ் தேசியம் என்னும் அந்த தமிழர்களின் தாயக கோட்பாடு வலுவிழக்கும் போது அல்லது இல்லாமல் செய்யப்படும்போது தமிழர் தாயகம் என்பது இல்லாமல் போய்விடும் என்பதை உணரும் நிலையில் இன்று வடகிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் இல்லையென்பதே பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

இந்த நாட்டில் தொடர்ச்சியான சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அடக்குமுறைகளும் தமிழ் மக்கள் மீதான அத்துமீறல்களுமே இந்த நாட்டில் தமிழர்களின் மிதவாத அரசியலில் இருந்து வேறுபட்ட வகையில் வடகிழக்கில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடுவதற்கு நிர்ப்பந்தித்தது. தமிழ் தலைவர்களின் அரசியல் போக் கில் ஏற்பட்ட மாற்றத்தினால் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படாது என்பதை உணர்ந்த நிலையிலேயே அந்த ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றது.

எவ்வாறாயினும் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் என்பது தமிழர்களுக்கான முகவரியை உலகளவில் வழங்கிய போதிலும் தமிழர்களின் உரிமைசார்ந்த விடயங் களை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டபோதிலும் ஆயுதப் போராட்டம் மட்டும் போதாது என்று உணர்ந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளினால் அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆயுதப்போராட்டம் சாராத தமிழ் தேசிய அரசியலை முன்னெடுக்கும் வகையிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டு தமிழர்களுக்கான இராஜதந்திர போராட்டங்களை முன்னெடுக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டு வழங்கப்பட்டது.

ஆனால் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களுக்கான அரசியல் தலைமைத்துவம் தொடர்பிலும் தலைமைத்துவ ஆசைகளும் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினை உடைக்கும் நிலைக்கு கொண்டுசென்றது.தமிழ் மக்கள் தொடர்பிலும் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்களும் சிந்திக்காத நிலையில் தொடர்ச்சியான கொதிநிலையே தமிழ் தேசிய கட்சிகள் மத்தியில் காணப்பட்டன. இதனைப் பயன்படுத்திக்கொண்ட சிங்கள தேசிய அரசுகள் தங்கள் சார்ந்து செயற்படக்கூடியவர்களையும் அதற்குள் இலகுவாக கொண்டுசேர்க்கும் வேலைத்திட்டத்தினை இலகுவில் செய்தனர்.

இன்று தமிழ் தேசிய பரப்பிற்குள் ஏற்பட்டுள்ள நிலைமை என்பது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னரே ஏற்பட்டுவிட்டது. இலங்கை உளவுத்துறையும் சர்வதேச உளவுத்துறைகளும் கனகச்சிதமான முன்னெடுத்த நகர்வுகளுக்குள் எம்மவர்கள் மாட்டிக்கொண்டதன் விளைவே இன்றைய நிலையாகும்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்து தமிழ் மக்களின் உரிமைசார்ந்த விடயங்களை கவனத்தில் கொள்ளாத காரணத்தினால் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அதிர்ப்தி நிலை தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது ஏற்பட்டது.அதன்காரணமாக 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாரிய தோல்வியை சந்தித்தது.

எனினும் 2020ஆம் ஆண்டு ஆட்சியினை பொறுப்பேற்ற கோத்தபாய ராஜபக்ஸ அவர்களுக்கு ஆதரவாக வடகிழக்கில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் மற்றும் அன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு முன்னெடுத்த செயற்பாடுகளினால் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வடகிழக்கில் குறிப்பாக வடக்கில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினை ஆதரித்த அதேநேரம் கிழக்கில் ஓரளவுக்கு தமிழ் தேசிய கட்சி தப்பிபிழைத்தது.

நல்லாட்சி காலத்தில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளும் 2020ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உடைவும் வடகிழக்கில் தமிழ் மக்களை மாற்றத்தினை நோக்கி இட்டுச்சென்றது.

தமிழ் தேசிய கட்சிகளுக்குள் நடந்த கடுமையான மோதல் நிலைமைகளும் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் சுமந்திரன் போன்றவர்கள் செய்த மோசமான செயற்பாடுகளும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய கட்சிகளுக்குள் நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு கொண்டு சென்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பில் கிழக்கில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்த நிலையில் வடக்கிலும் இருந்த ஆதரவு நிலைகள் குறைந்த நிலையில் தமிழ் தேசிய கட்சிகள் வடக்கில் பாரிய பின்னடைவினை எதிர்கொண்ட அதேநேரம் கிழக்கு மாகாணத்தில் ஓரளவு பாதுகாக்கப்பட்டது.

வடகிழக்கு பொறுத்த வரையில் இன்று தமிழ் தேசிய கட்சிகள் மீது கடும் அதிருப்தியில் தமிழ் மக்கள் இருப் பதை காணமுடிகின்றது. இன்று இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ போட்டி, அதிகாரப் போட்டி, தமிழ் தேசிய பற்றாளர்கள் வெளியேற்றம் என்பன எதிர்காலத்தில் பாரிய பின்னடைவை தமிழ் தேசிய கட்சிகளுக்கு இன்னும் ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது.

இன்று கிழக்கில் சாணக்கியன் எம்.பியினால் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.கடந்தகாலத்தில் ஏற்பட்ட செயற்பாடுகள் காரணமாக இளையோர் தமிழ்தேசிய அரசியலில் நம்பிக்கை இழந்து வரும் நிலையில் சாணக்கியனின் செயற்பாடும் தமிழ் தேசிய அரசியலை குழி தோண்டி புதைக்கும் செயற்பாடாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் வடகிழக்கில் தமிழ் தேசிய அரசியலை மீட்க வேண்டிய பாரிய பொறுப்பு நிற்கின்றது. அதிலும் இளந்தலைமுறையினரிடம் தமிழ் தேசிய அரசியல் கையளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் மூலமாக தமிழ் தேசிய அரசியல் மீள கட்டியெழுப்பப்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் தொடர்பில் தமிழ் தேசிய கட்சிகளில் இருப்பவர்கள் கதிரைகளுக்காகவும் தலைமை பதவிகளுக்காகவும் வெளிநாட்டு காசுக்காகவும் அடிபட்டு முறிபட்டு செல்வார்கள் என்றால் தந்தை செல்வா சொன்னது போன்று தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு செல்லும் நிலையேற்படும்.

இன்றைய நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடு என்பது வடகிழக்கு தமிழ் மக்களுக்கு பாரிய ஒரு பொறியாகவே இருந்து வருகிறது. இந்த பொறியில் ஏற்கனவே பலர் வீழ்ந்துள்ள நிலையில் இன்று தமிழ் தேசிய பரப்பில் உள்ளவர்களின் செயற்பாடுகளினாலும் பலர் செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இளையோரின் தலைமையில் தமிழ் தேசிய அரசியல் வழியொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கான பாதையினை இன்றுள்ள தமிழ் தேசிய கட்சிகள் ஏற்படுத்த வேண்டும்.அதற்கான அழுத்தங்களை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வழங்க வேண்டும்.

வடகிழக்கில் வெறுமனே தேர்தல் அரசியல் மட்டும் முன்னெடுத்துச் செல்லும் நிலைமையினை தவிர்த்து தமிழ் மக்களின் உண்மையான உரிமைப்போராட்டம் இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லப்பட்டு தமிழ் தேசியத்தின் பாதை வலுவாக்க படவேண்டும். அதன்மூலமே தமிழ் தேசிய கட்சிகளுக்குள் இருந்துகொண்டு தமிழ் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்போரை வெளியேற்றுவதற்கான ஒரு வழியை ஏற்படுத்த முடியும்.

• • •

## இலங்கை சிக்கப்போகும் ... தொடர்ச்சி...

ஆடை மற்றும் இறப்பர் ஏற்றுமதிப் பொருட்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிச்செல்ல வேண்டியிருப்பதால் பயண நேரம் 14 நாட்கள் வரை அதிகரித்துள்ளதுடன் கப்பல் கட்டணங்களும் உயர்ந்துள்ளன.

இதேநேரம், பெப்ரவரி மாதத்தில் 1.6சதவீதமாகக் குறைந்திருந்த இலங்கையின் பணவீக்கம், இந்த எரிபொருள் விலை உயர்வு மற்றும் விநியோகச் சங்கிலி பாதிப்புகளால் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் 'முறைமை மாற்றத்திற்கான' வழங்கிய வாக்குறுதிகள் அமெரிக்க, இஸ்ரேல், ஈரான் மோதல்களில் பரிசோதனைக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சி என்பது நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கில் ஏவுகணைகளை இலங்கை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் அதனால் உள்நாட்டில் ஏற்படும் விலை உயர்வையும் எரிபொருள் நெருக்கடியையும் எவ்வாறு நிர்வகிக்கிறது என்பதைப் பொறுத்தே இலங்கையின் எதிர்காலம் அமையவுள்ளது.

தற்போதைய சூழலில் மத்திய கிழக்கு போர் இலங்கை மீது திரைமறைவு வரிகள் அதிகரிப்புக்கும், அதிரடியான கட்டண உயர்வுகளுக்கும் அடிப்படையாகியுள்ளது. இது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முடக்கும் அபாயத்தை தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் உண்மையான தரவுகளை மறைப்பதும், முரண்பாடான விளக்கங்களை அளிப்பதும் மக்களின் நம்பிக்கையைச் சிதைப்பதோடு மட்டுமல்லாது, சுமைகளால் தத்தளிக்கும் சாதாரண மக்கள் மீது, மேலும் சுமைகளை அதிகரித்துள்ளது.

தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடத்தில் மேலதிக எரிபொருளை விநியோகிக்குமாறு பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்துள்ளது. அதற்கு டெல்லியில் இருந்தும் சாதகமான சமிக்ஞை வெளியாகியுள்ளது.

அதேபோன்று இலங்கைக்கான ரஷ்ய தூதுவரை அழைத்து கொள்வனவுக்காக ரஷ்யாவிலிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை அளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிடவும், ஏப்ரல் இறுதி வரையிலான தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்துக்காக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடமிருந்து எரிபொருட்களை கொள்வனவு செய்யப்போவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கிறது.

இந்த நிலைமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கையிலேயே நாட்டில் நான்கில் ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான உபாலி பன்னிலகேயே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துவிட்டார்.

இவ்வாறான நிலையில் அமெரிக்க, இஸ்ரேலிய, ஈரான் யுத்தமும் மத்திய கிழக்கு வளைகுடா பதற்றமும் நீண்டகாலம் நீடிக்குமானால், இலங்கையின் பொருளாதார மீட்சி என்பது வெறும் கனவாகவே போய்விடும்.

• • •



# மேன்மை கொள்ளும் வேளாண்மை

வன்னியூர் **கலா பாரதி**

விவசாயம் என்பது தொழில் என்பதைத் தாண்டி அது எங்கள் வாழ்வியல். எங்கள் கலாசாரம். ஆம் பண்டைய காலம் தொட்டே வேளாண்மை மரபு ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வந்த மேன்மைமிகு தொழிலாக இருக்கிறது.

ஒவ்வொரு உயிரினங்களும் தமக்கான உணவைத் தாமே தேடி உண்ண வேண்டிய ஒரு காலம் இருந்தது. அதன் பின்னராக வந்த காலங்களில் உணவுப் பற்றாக்குறையை சமாளிக்க மனிதன் தமக்கான உணவை தாமே பயிரிடத் தொடங்கினான். இதன் காரணமாகவே நதிக் கரையோரம் அவனது இருப்புக்கள் அமைக்கப் பட்டன.



இது இவ்வாறு இருக்க... பின்னர் தொழிற்புரட்சி காரணமாகத் தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டது. இதன் போது மெல்ல, மெல்ல பல் வேறு வகையான தொழில் முறையை நாடி அவன் நகர்வுகள் இடம் பெற்றன.

இது நாளடைவில் பெரும் விகிதாசாரமாக இருந்த போது... பலரால் வேளாண்மைச் செய்கை கைவிடப் பட்டது. பண்படுத்திய விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறின. அங்கு புல் பூண்டுகள் மண்டிக் கிடக்க ஆடு மாடுகள் மேய்ச்சல் செய்யும் இடமாகக் காணப் பட்டன.

ஆனாலும் வேறு பலராலும் இந்தப் பாரம்பரிய தொழிலைக் கைவிடமுடியாமல் தொடர்ந்தும் பயிரிட்ட வண்ணமே இருக்கின்றார்கள்.



பல அரச அரசசார்பற்ற திணைக்கள ஊழியர்கள் பகுதி நேரத் தொழிலாக இன்றும் வேளாண்மையை தொடர்ந்து செய்து வந்து கொண்டு இருப்பதும் இதற்கான காரணமாகவும் இருக்கலாம்.

ஆனாலும் சனத்தொகை மதிப்பீட்டுக்கு அமைய இந்த விளைச்சலின் அளவு போதுமானதாக இல்லாத நிலையில்... வெளிநாடுகளில் இருந்து பல்வகையான அரிசி வகைகள் இறக்குமதி செய்யப் படுகின்றன.

இந் நிலை இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. வளமான மண்ணும், நீர் நிலைகளும் , சிறப்பான காலநிலையும் இருக்கும் இந் நாட்டில்... அரிசி இறக்குமதி என்பது விரும்பத்தக்க விடயமாக இருக்க வில்லை .



இஸ்ரேலுடன் இராஜதந்திர ... தொடர்ச்சி...

ஒரு விவசாயி ஆனவன் தான் பயிரிடும் நெல் அரிசிக்கு... உள்ளூர் சந்தைகளில் நியாயமான நிர்ணய விலை இல்லை என்றே ஆதங்கப்பட்ட காலங்கள் அதிகமாக இருந்தும் இருக்கின்றது.

விவசாயம் என்பது விரும்பத் தக்க வருமானத்தை ஈட்டித் தரும் தொழிலாக இல்லை என்று பலபேர் இன்றும் சொல்லிக் கொண்டே மீண்டும் மீண்டும் அத்தொழிலில் ஈடுபடுகிறார்கள்.



அதற்கு காரணம் விவசாயம் அவர்களின் பாரம்பரியத் தொழில் மட்டும் அல்ல ஒரு மரபின் அடையாளம். ஆகையால் தான் அவனால் விவசாயத்தை ஆத்ம உணர்வோடு செய்ய முடிகின்றது.

சவால்கள் நிறைந்த இன்றைய கால கட்டத்தில்... வனஜீவராசிகளிடமிருந்து விவசாயத்தைப் பாதுகாத்து, பின்னர் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்து, அறுவடை செய்ய அவனுக்கு போதும் போதும் என்றாகி விடுகிறது.

அரசு மானிய அடிப்படையில் சில முன்னெடுப் புக்களை செய்தாலும்... அது திருப்தி மிக்கதாக இருப்ப தில்லை. அத்தோடு கிருமி நாசினி,களைநாசினி மற்றும் உர வகைகள் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருகின்றது. ஒரு போகம் செய்தவர்கள் அடுத்த போகம் செய்யும் போது.. இதன் தாக்கத்தை உணர்ந்து கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் எரிபொருளின் விலை மாற்றம் உழவு வேலைகளின் போது இன்னொரு பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.



இதெல்லாம் கடந்து... நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருளாதார நிலை மாற்றம்... விவசாய அறுவடை காலத்திலும் அதற்கு முன்பும் நாளாந்த வேலைகளின் பொருட்டு வேதனவிடயத்தில் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றது.

இதற்கு பின்னரும் ஒரு விவசாயி வேளாண் மையை மேற் கொள்கிறான் என்றால்... அவன் தன் சார்ந்து மட்டும் அல்ல, தன் சமூகம் சார்ந்தும் சிந்திப்பவனாகவே இருக்கிறான்.

இயற்கை உர வகைகளை பாவித்து பெரும் விளைச் சலை பெற முடியாது என்ற நிலையில்... பொரு ளாதாரத்தை ஈடுகட்ட செயற்கைப் பசளை வகைகளை பாவிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாலும்... தற்சமயம் வீரியம் மிக்க கிருமிகளை அழிக்கும் நோக்குடன் செயற் படுவதாலும்....

உணவு நஞ்சாகிப் போகிறது என்பதும் உண்மையே! இதுவே இன்று மறைமுகமான உடல் நோய் களுக்கும் காரணம் ஆக இருப்பதாக பல மருத்துவ அறிக்கைகள் சொல்கின்றன.

எது எவ்வாறாயினும்... விவசாயம் ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பது மறுக்க முடியாத உண்மை. என்று ஒரு விவசாயிக்கு அரசிடமிருந்து திருப்தி கொள்ளும் வகையில் சலுகைகள் கிடைக்கின்றனவோ கொள்வனவு விடயங்களில் நியாயமான முறைகையா ளப்படுகின்றனவோ? அதீத நஞ்சு வாய்ந்த உர வகைகளை இறக்குமதி செய்வதை நிறுத்துகின்றனரோ...

மாற்றீடாக இயற்கை பசளையை நம் நாட்டில் போதியளவு பயன் படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட் டில்...மாற்று நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுகின்றதோ? அன்று விவசாயம்... மேன்மை மிக்க தொழிலாக இருந்து... அது மக்களை நல்ல முறையில் சென்றடையும் என்பது திண்ணம். நன்மை பயக்கும் என்பதும் திண்ணம்.

• • •

திருச்சி சிறப்பு ... தொடர்ச்சி...

செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கும் மறுப்பு தெரி வித்து இருந்தார்.

ஒன்பது நாட்கள் ஆகிவிட்டது. நான் உண்ணா விரதம் இருந்து எனது உடல் நிலை மிக மோசமாகி விட்டது' என்று தெரிவித்துள்ளார்.




# நெருக்கடியில் 'சிலோன் டீ': போரால் முடங்கும் தேயிலை ஏற்றுமதி

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் அந்நியச் செலாவணி ஈட்டலில் முதுகெலும்பாகத் திகழும் தேயிலைத் துறை, தற்போது ஒரு பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் இராணுவ மோதல்கள், இலங்கையின் தேயிலை ஏற்றுமதியை நிலைகுலையச் செய்துள்ளன. உலகின் மிகச்சிறந்த தேயிலையாகக் கருதப்படும் 'சிலோன் டீ' (Ceylon Tea) சர்வதேசச் சந்தைக்குச் செல்வதில் ஏற்பட்டுள்ள இந்த முட்டுக்கட்டை, நாட்டின் பொருளாதார மீட்சியில் பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது.



மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தேயிலையை விநியோகிக்க முடியாத சூழல் நிலவுவதால், ஏற்றுமதியாளர்கள் வாரத்திற்கு சுமார் 10 முதல் 15 மில்லியன் அமெரிக்க டொலர் வரை வருவாய் இழப்பைச் சந்திப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கையின்படி, ஏற்றுமதியாளர்களின் கைகளில் போதுமான கொள்முதல் ஆர்டர்கள் (Orders) இருந்தபோதிலும், தளவாடச் சிக்கல்கள் மற்றும் போர்க்கால அபாயங்கள் காரணமாக அவற்றை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் சுமார் 52% மத்திய கிழக்கு நாடுகளையே சார்ந்துள்ளது.



குறிப்பாக, நாட்டின் கீழ்நாட்டு நிலப்பரப்பு பகுதிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கே அங்கு பெரும் வரவேற்பு உள்ளது. இத்துறை பெரும்பாலும் சிறு தேயிலை தோட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. கடந்த 2025ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 125 மில்லியன் கிலோகிராம் தேயிலை மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

மருதன் ராம்

ஏற்றுமதியாளர்கள் ஏற்கனவே பெற்றிருந்த காப்பீட்டுத் தொகைகள் தற்போது செல்லு படியற்றதாக மாறியுள்ளன.



இதன் மதிப்பு 750 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஈராக், ஈரான், லிபியா, துருக்கி, சவுதி அரேபியா, சிரியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் இலங்கையின் பிரதான சந்தைகளாக திகழ்கின்றன. எனினும் ஆப்பிரிக்கா வழியாக லிபியா மற்றும் துருக்கியை அடைய மாற்று வழிகள் இருந்தாலும், மிக அதிகப்படி யான சரக்குக் கட்டணங்கள் காரணமாக வர்த்தகம் சாத்தியமற்றதாகியுள்ளதாக தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## ஏற்றுமதி ஸ்தம்பித்ததற்கான பிரதான காரணங்கள்

மத்திய கிழக்கிற்கான கடல்வழிப் போக்குவரத்து ஹார்முஸ் ஜலசந்தி மற்றும் செங்கடல் சூயஸ் கால்வாய் ஊடாகவே நடைபெறுகிறது. தற்போதைய போர்ச் சூழல் இந்த வழித்தடங்களை முற்றாகப் பாதித்துள்ளது. மோதல் வெடித்தவுடன் முன்னணி கப்பல் நிறுவனங்கள் அனைத்தும் இப்பிராந்தியத்திற்கான தமது சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தின. ஆரம்பக் கட்டத்தில் மத்திய கிழக்கின் பல முக்கிய துறைமுகங்கள் மூடப்பட்டமை விநியோகச் சங்கிலியைத் துண்டித்தது. அதேநேரம் மார்ச் 4 முதல் சில நிறுவனங்கள் சேவையைத் தொடங்கினாலும், கட்டணங்கள் கடுமையாக உயர்ந்துள்ளன. ஒரு 20 அடி கொள்கலனுக்கு1,800 டொலர்களும், 40 அடி கொள்கலனுக்கு 3,000 டொலர்களும் அறவிடப்படுகின்றன.

இதேவேளை போர் அபாயம் காரணமாக, கொழும்பிலிருந்து இப்பிராந்தி யத்திற்குச் செல்லும் வழக்கமான கப்பல்களின் எண் ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. அதேநேரம் மத்திய கிழக்கில் இடம்பெறும் மோதலால் ஏற்றுமதியில் ஏற் பட்டுள்ள முட்டுக்கட்டை கொழும்பு தேயிலை ஏலத்திலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.



போதிய கொள்முதல் திறன் இல்லாததால், இந்த வார ஏலத்தில் தேயிலையின் சராசரி விலை கிலோ ஒன்றிற்கு சுமார் 50 ரூபாய் குறைந்துள்ளது. குறிப்பாக, குறைந்த விளைச்சல் கொண்ட தேயிலை விலைகள் கிலோ ஒன்றிற்கு 75 ரூபாய் வரை சரிவைக் கண்டுள்ளதாக தரகர்கள் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே அனுப்பப்பட்ட ஏற்றுமதிகளுக்கான கொடுப் பனவுகள் தாமதமாவதால், ஏற்றுமதியாளர்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளனர். இது

தொடர்ச்சி: பக்கம் 13

 © 2026 இலக்கு இணையம்



# ஹோர்முஸ் நீரிணை நெருக்கடி: இந்திய கப்பல்களுக்கு உருவான புதிய சவால்

**ஆதி:** சட்டவாளர் - தமிழ் நாடு

மத்திய கிழக்கு பகுதியில் உருவாகியுள்ள போர் பதற்றம் உலக அரசியலையும் கடல் வர்த்தகத்தையும் பெரிதும் பாதித்து வருகிறது. குறிப்பாக ஹார்முஸ் நீரிணை உலகின் மிக முக்கியமான கடல் பாதைகளில் ஒன்றாகக் உள்ளது. பெர்சிய வளைகுடா நாடுகளிலிருந்து உலகின் பல பகுதிகளுக்கு எண்ணெய் மற்றும் இயற்கை வளங்கள் பெரும்பாலும் இந்த நீரிணை வழியாகவே கொண்டு செல்லப்படுகின்றன. எனவே அந்தப் பகுதியில் உருவாகும் எந்தவொரு இராணுவ மோதலும் உலக பொருளாதாரத்திற்கும் எரிசக்தி பாதுகாப்பிற்கும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.



இந்த சூழ்நிலையில் இந்தியா போன்ற பெரிய எண்ணெய் இறக்குமதி நாடுகளுக்கு இந்த நெருக்கடி மிகப் பெரிய சவாலாக மாறியுள்ளது. இந்தியா பயன்படுத்தும் கச்சா எண்ணெயின் ஒரு பெரிய பகுதி மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வருகிறது. அந்த எண்ணெய் கப்பல்கள் பெரும்பாலும் ஹார்முஸ் நீரிணையை கடந்து தான் இந்திய துறைமுகங்களை அடைகின்றன. இதனால் அந்த கடல் பாதையில் ஏற்படும் பாதுகாப்பு சிக்கல்கள் இந்தியாவின் பொருளாதாரத்தையும் எரிசக்தி விநியோகத்தையும் நேரடியாக பாதிக்கக்கூடியதாக உள்ளன.



தற்போது ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள இராணுவ பதற்றம் அந்த கடல் பகுதியை மிகவும் ஆபத்தானதாக மாற்றியுள்ளது. கடலில் வெடிகுண்டுகள் பதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம், ஏவுகணை தாக்குதல் அபாயம் மற்றும் கடற்படை மோதல்கள் போன்ற காரணங்களால் அந்தப் பகுதி வழியாக கப்பல்கள் பயணம் செய்வது மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது.




இந்த சூழ்நிலையில் இந்திய கப்பல்களுக்கும் பெரிய தடைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக எண்ணெய் ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மற்றும் வர்த்தக கப்பல்கள் அந்தப் பகுதியை கடந்து பயணம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தாலும் தற்போது பாதுகாப்பு காரணங்களால் பல கப்பல்கள் தங்களின் பயணத்தை தாமதப்படுத்தியுள்ளன. சில கப்பல்கள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. தற்போதைய பதற்றமான சூழ்நிலை காரணமாக ஹார்முஸ் நீரிணை வழியாக இந்திய கப்பல்கள் இயல்பாகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலைமை இந்தியாவின் வெளிநாட்டு கொள்கை குறித்து பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது. குறிப்பாக போரின் ஆரம்ப நாட்களில் இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து அரசியல் வட்டாரங்களில் விமர்சனங்கள் எழுந்தன. மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதலின் ஆரம்ப கட்டத்தில் இந்திய அரசு வெளிப்படையான கருத்தை வெளியிடாமல் சில நாட்கள் மௌனம் காத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த காலகட்டத்தில் இஸ்ரேல் ஆதரவு நிலைதான் இந்திய அரசின் அணுகுமுறையில் வெளிப்பட்டதாக சில அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். மேலும் ஈரான் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை இந்தியா வெளிப்படையாக கண்டிக்காதது குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன. ஜீயோனிச அரசியல் மீது ஏற்பட்ட மிகை கற்பனைகளின் தாக்கம் இந்தியாவின் அரசியல் அணுகுமுறையிலும் வெளிப்பட்டதாகவும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.

மோடி தலைமையிலான அரசின் இந்துத்துவ தீவிர தேசியவாத கற்பனைகள் இந்தியாவை எரிபொருள் சேவை நெருக்கடிக்கு தள்ளியுள்ளன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. மத்திய கிழக்கு அரசியலில் சம நிலை நிலைப்பாடு தேவைப்படும் நேரத்தில் எடுத்த சில வெளிநாட்டு கொள்கை முடிவுகள் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை சிக்கலான நிலைக்கு கொண்டு சென்றதாக அவர்கள் வாதிடுகின்றனர்.



இதற்கிடையில் ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பிறகு சில நாட்கள் இந்திய அரசு மௌனம் காத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த நேரத்தில் ஈரான் பதிலடி கொடுக்க முடியாத நாடு என்ற இஸ்ரேல் வட்டாரத்தின் மதிப்பீட்டை இந்திய அரசு நம்பியதாகவும் சில விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால் பின்னர் ஈரான் மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகள் அந்த மதிப்பீடுகளை மாற்றியதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில் பார்க்கும்போது ஹார்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள தற்போதைய பதற்றம் உலக அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் பெரிய சவாலாக மாறியுள்ளது. அந்த சூழ்நிலையில் இந்திய கப்பல்கள் அந்தப் பகுதி வழியாக இயல்பாகச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்த நெருக்கடி எப்போது தணியும் என்பதையும் அதன் விளைவுகள் உலக எரிசக்தி சந்தையை பாதிக்கும் என்பதை உலக நாடுகள் கவனமாக கவனித்து வருகின்றனர்.

• • •

# தோழர் நல்லக்கண்ணு

## எளிமையின் அடையாளம் மட்டுமல்ல, பொதுவுடமைப் போராட்ட மரபின் அடையாளம்



வ. ரமணி,
அரசியல் செயற்பாட்டாளர்

கட்சி பேதம் கடந்து அனைவரின் மனதைக் கவர்ந்த ஒரு தலைவர், தமிழ்நாட்டின் நெல்லை, தஞ்சை போன்ற மாவட்டங்களின் பட்டிதொட்டியெங்கும் உழைக்கும் மக்களுக்காக இரவு பகல் பாராமல் தன் வாழ்நாளை அர்ப்பணித்த தியாகத்தின் பெரு நெருப்பு. இந்தியப் பொதுவுடமை கட்சியின் போர்க்குணமிக்க களப் போராளி என்றால் தோழர் நல்லக்கண்ணு ஆவார். சொத்து சுகம் பணம் அதிகாரம் என எதற்கும் இடம்கொடுக்கா நேர்மையான கம்யூனிஸ்ட் பண்பாளர். எதிரிகளை ஆட்டங்காணசெய்த அஞ்சா நெஞ்சன், பண்ணையார்களையும் காலில் விழ வைத்த சமரசமில்லா போராளி என்றால் தோழர் நல்லக்கண்ணு என்று கூறலாம். 100 ஆண்டு பொதுவுடமை இயக்கத்தின் அனுபவப் பெட்டகமாகத் திகழ்ந்தவர் தலைவர் நல்லகண்ணு அவர்களின் பொதுவுடமை வாழ்க்கையின் போராட்ட மரபுதான் இன்றைய தலைமுறைகள் எடுத்துக்கொள்ள வேண்டிய அனுபவம்.

நமக்கு, தோழர் நல்லக்கண்ணு முன்னுதாரணம் என்றால், நல்லக்கண்ணுவிற்கு முன்னுதாரணமானவர்கள், முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஜீவா மற்றும் பி.வி. சீனிவாசராவ் ஆகியோரின் களப்பணியும் கடினஉழைப்பும்தான்.அதன்வழி பயணித்த தோழர்,101வது வயதில் தன் போராட்ட வாழ்வை முடித்துக்கொண்டார். தமிழ்நாட்டில் தோழரின் 80 ஆண்டுகள் மக்கள் களப்பணி என்பதை சீர்தூக்கிப் பார்க்கையில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று காந்தியவாதியாக அடையாளப்பட்டவர். பள்ளிக்காலத்தின் போதே பொதுவுடமை அரசியலில் ஈர்க்கப்பட்டு. தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம் பகுதியில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த தோழர், 1943 ஆம் ஆண்டு தன் 18 வயது மாணவர் பருவத்தின்போதே பொதுவுடமை இயக்கத்தில் இணைந்தார். விவசாய சங்கத்தின் தலைவராக, பின் கட்சியின் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார். இந்திய கம்யூன்ஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலகட்டம். தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். பின் கட்சியின் மாநிலச் செயலாளராக பொறுப்பேற்றார். தஞ்சை டெல்டா மாவட்டங்களில் பண்ணை ஆதிக்கத்திற்கு எதிராக உழைக்கும் மக்களை ஒன்று திரட்டி மிக உறுதியோடு நேர்மையோடு போராடி பண்ணையார்களின் நிலங்களை மீட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளித்தார். சாதிய வன்முறை கும்பல் தன் குடும்பத்தை தாக்கியபோதும் எந்த சமரசத்துக்கும் இடம் தராமல் இருதரப்பு மக்கள் ஒற்றுமையை உறுதி செய்தவர். நெல்லை சதி வழக்கில் கைது செய்யப்பட்டு 8 ஆண்டுகள் சிறை வாழ்க்கையை அனுபவித்தார். எத்தனை கோடிகள் லட்சங்கள் கொடுத்தாலும் அதனை தனக்காக வைத்துக்கொள்ளாமல் கட்சிக்காக அர்ப்பணித்து கட்சிதான் என் வாழ்க்கை என வாழ்ந்து காட்டியுள்ளார்.

ஆசிரியரான தன் மனைவி ரஞ்சிதம்மாள் அவர்களை திருமணம் செய்துகொண்டார். ஆண் தோழர்கள் கட்சிப் பணியை கவனித்துக்கொண்டால் குடும்பத்தை பராமரித்து பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு மனைவியை சார்ந்துவிடும். அவ்வாறுதான் ரஞ்சிதம்மாள் குடும்பத்தை கவனிக்க தோழர் நல்லக்கண்ணு பொது வாழ்வில் ஈடுபட்டு வந்தார். அவரின் அரசியல் செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் என்ன செய்துவிட்டார்கள்? என்று கேட்கும் நபர்களுக்கு சில செய்திகளை விட்டுச் சென்றுள்ளார். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் பொது மக்களும் தோழரின் தியாகத்திற்கு தலை வணங்கிய இறுதி ஊர்வலம் எதைக் காட்டுகிறது என்றால்? கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட்கள் செய்த போராட்டமும், மக்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த வர்க்கப் போராட்டக் களத்தில் செய்த தியாகமும்தான். உழைப்பாளி மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தின் அடையாளமாக அர்த்தமுள்ள லட்சிய வாழ்விற்கு மக்கள் அளித்த மதிப்பு அளவிடற்கரியது. தோழர் நல்லக்கண்ணுவிற்கான மக்களின் அஞ்சலி என்பது பெரு மதிப்பை பெற்று நிற்கிறது. அது பொதுவுடமை இயக்கத்தின் போராட்டத்திற்கும் தோழர்களுக்கும் செலுத்தும் மதிப்பு. செங்கொடி இயக்கத்தின் வரலாறு என்பது கிராமப்புறங்களில் நிலவும் சுரண்டலுக்கு எதிராக, வர்க்கப் போராட்டத்தை கட்டியமைத்தது.

சாதி ஆதிக்கத்தை எதிர்த்த பண்ணையாதிக்கத்தை வீழ்த்திய வல்லமை கொண்ட ரத்தமும் தசையுமான வரலாறு என்பதை இன்றைய தலைமுறைகள் அறிய வேண்டிய சாட்சிதான் தோழர் நல்லக்கண்ணுவின் வாழ்வு. விவசாயிகள் தொழிலாளர்கள், பெண்கள் நிலமற்ற ஏழைகள் என அனைத்துத்தரப்பு மக்களின் தலைவராக அறியப்பட்டவர். குறிப்பாக 2009 காலகட்டத்தில் ஈழத்தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை கண்டித்தும் ஈழத்தமிழர்கள் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் எப்போதும் நின்றவர். ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான உரிமையை உரக்கச் சொல்லி நின்றவர். பெண்ணுரிமைக்கு பெருமை சேர்த்தவர். எதிரிகளுக்கும் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர்தான் பொதுவுடமைப் போராளி நல்லக்கண்ணு அவர்கள். சொல்லிலும் செயலிலும் ஒன்றாக வாழ்ந்து காட்டினார்.

இத்தகைய போராட்ட பண்பை, சமசரசமில்லா வாழ்வை, நேர்மையை, நெஞ்சுறுதியை, மக்கள் பணிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணிக்கும் தியாகத்தை இன்றைய காலகட்டத்தில் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்பதையே தோழரின் இறுதி ஊர்வலம் நமக்கு உணர்த்துகிறது. கடந்த காலத்தில் செலுத்திய களப்பணி,தியாகம் போராட்டங்களில் மக்களோடு மக்களாக நின்று தன் வாழ்வை அர்ப்பணித்த எதற்கும் எங்கும் சமரசம் செய்துகொள்ளா கம்யூனிஸ்ட் பண்பும் போராட்ட வெற்றியும் தான் இன்றைக்கும் பொதுவுடமை இயக்கத்தின்மீது மதிப்பை உருவாக்கியிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் வலிமை பெற அத்தகைய மக்கள் பணி இன்றைக்குத் தேவையாக இருக்கிறது.

தமிழ்ச்சமூகத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த நீங்கள் என்றைக்கும் மக்களின் மனங்களில் வாழ்வீர்.

• • •

### ஈரானிய பள்ளியில் 175... தொடர்ச்சி...

வரும் பிரச்சாரத்தில் இது மிகவும் கொடிய ஒற்றைத் தாக்குதலாகும்.

இந்த தாக்குதல் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை கடற்படையால் பயன்படுத்தப்பட்ட வசதிகள் மீதான அமெரிக்க தாக்குதல்களின் தொடக்க அலையின் ஒரு பகுதியாகும்.

அமெரிக்க மத்திய கட்டளை அதிகாரிகள் பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் காலாவதியான இலக்கு தரவுகளை நம்பியிருப்பதாக புலனாய்வாளர்கள் நம்புகின்றனர், இது பள்ளி கட்டிடத்தை ஒரு இராணுவ வளாகத்தின் ஒரு பகுதியாக வகைப்படுத்தியது, இது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பள்ளியாக மாற்றப்பட்டிருந்தாலும் கூட. அந்த இடத்தில் பொதுமக்கள் பயன்படுத்தியதற்கான தெளிவான அறிகுறிகள் இருந்தன, அவற்றில் விளையாட்டு மைதானம், குழந்தைகளுக்கான சுவரோவியங்கள் மற்றும் பிரகாசமான வண்ணம் தீட்டப்பட்ட சுவர்கள் ஆகியவை அடங்கும்.

காலாவதியான தகவல்கள் ஏன் மறுபரிசீலனை செய்யப்படவில்லை என்பதற்கான முதற்கட்ட விசாரணைகள், ஆந்த்ரோபிக்ஸ் கிளாட் போன்ற புதிய செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்துவது முதன்மைக் காரணம் என்பது “சாத்தியமில்லை” என்று அந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது..

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் பொறுப்பை மறுத்து, மாறிவரும் விளக்கங்களை வழங்கியுள்ளார், முதலில் “மிகவும் துல்லியமற்ற” ஈரானிய வெடிமருந்துகள் தான் காரணம் என்று பரிந்துரைத்தார், பின்னர் தெஹ்ரானிடமும் “சில டோமாஹாக்குகள் உள்ளன” என்று ஆதாரங்கள் இல்லாமல் கூறினார். ஈரான் மீதான தாக்குதல்களில் 1,600 கி.மீ. வரை செல்லக்கூடிய டோமாஹாக்ஸ் விமானங்களைப் பயன்படுத்தியதை அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

### எரிபொருள் விடயத்தில் ... தொடர்ச்சி...

தொடங்கியுள்ளன.

எதிர்காலத்தில் நிலவக்கூடிய நிச்சயமற்ற சூழலில், இலங்கையில் தடையில்லாத மற்றும் பாதுகாப்பான எரிபொருள் விநியோகத்தைப் பேணுவதே இந்த நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### இலங்கையில் நான்கில்... தொடர்ச்சி...

பிரிவுகளிலும் நிலவும் வறுமைக்கான உண்மையான காரணங்களை கண்டறிந்து, சமூக அபிவிருத்தி சபையின் பிரதிநிதிகளுடன் இணைந்து முறையான அபிவிருத்தித் திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கைக்கு அதன் பாதிப்பு குறைவாகவே காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 15 மாத காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட காத்திரமான நடவடிக்கைகளே இதற்கு காரணமாகும். அவ்வாறு பொருளாதாரத்தை சீர்செய்யாமல் இருந்திருந்தால், நாடு மீண்டும் ஒரு வரிசை யுகத்திற்கு தள்ளப்பட்டிருக்கும் என்று அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

# அணு ஆயுதங்கள் அரசியல்

# உயிர்வாழ்வதற்கான உத்தரவாதம்



அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்கு எதிரான தங்கள் இராணுவ பிரச்சாரத்தை நியாயப்படுத்தி, அணுசக்தி அச்சுறுத்தலில் இருந்து தங்களையும் உலகையும் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று கூறின. 11 அணுகுண்டுகளை உருவாக்க போதுமான ஆயுத தர யுரேனியத்தை தெஹ்ரான் ரகசியமாக குவித்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இருப்பினும், தாக்குதலின்பின் முதல் வாரத்திற்குப் பிறகு, அணுசக்தி அச்சங்கள் கதையின் ஒரு பகுதி மட்டுமே என்பது தெளிவாகியது.



ஈரானுக்கு எதிரான போர் என்பது மற்றொரு மத்திய கிழக்கு மோதல் மட்டுமல்ல. பனிப்போர் முடிந்ததிலிருந்து இப்பகுதியை மறுவடிவமைத்து வரும் ஒரு நீண்ட எழுச்சி செயல்முறையின் சமீபத்திய கட்டத்தை இது குறிக்கிறது. இன்று நடப்பதன் விளைவுகள் மத்திய கிழக்கிற்கு அப்பால் நீண்டு செல்லும்.

தற்போதைய போரை மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தொடங்கிய ஒரு மாற்றத்தின் உச்சக்கட்டமாகக் காணலாம். நவீன மத்திய கிழக்கு 20 ஆம் நூற்றாண்டில் காலனித்துவ பேரரசுகளின் வீழ்ச்சியின் போது தோன்றியது. ஆனால் அந்த ஒழுங்கு 1991 இல், குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேற்ற அமெரிக்கா ஆபரேஷன் டெசர்ட் ஸ்டோர்மைத் தொடங்கியபோது வெளிப்படத் தொடங்கி யது.

நேரம் அடையாளமாக இருந்தது. வளைகுடாப் போர் உலக அரசியலில் ஒரு வியத்தகு மாற்றத்துடன் ஒத்துப் போனது. சோவியத் ஒன்றியத்தின் சரிவு, பனிப்போரின் முடிவு, மற்றும் பெரும்பாலும் “ஒற்றை துருவ தருணம்” என்று அழைக்கப்பட்டதன் தோற்றம். நிகரற்ற அமெரிக்க ஆதிக்கத்தின் காலம்.

அதைத் தொடர்ந்து நெருக்கடிகள் மற்றும் தலையீடுகளின் சங்கிலி எதிர்வினை ஏற்பட்டது. செப்டம்பர் 2001 இல் நியூயார்க் மற்றும் வாஷிங்டன் மீதான தாக்குதல்கள் உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான போரை தூண்டிவிட்டன, இது ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் இராணுவ பிரச்சாரங்களுக்கு வழிவகுத்தது. பின்னர் அரபு வசந்தம் பிராந்தியம் முழுவதும் ஆட்சிகளை ஸ்திரமின்மைக்குள்ளாக்கியது, அதைத் தொடர்ந்து லிபியாவில் தலையீடு மற்றும் சிரியாவில் நீடித்த உள்நாட்டுப் போர்.

ஒவ்வொரு நெருக்கடியும் அதிக நாடுகளை சுழலுக் குள் இழுத்தது. படிப்படியாக, நிகழ்வுகளின் மீதான கட்டுப் பாடு அவற்றைத் தொடங்கியவர்களிடமிருந்து நழுவியது.

வாஷிங்டனைப் பொறுத்தவரை, இதன் விளைவு ஒரு மூலோபாய பொறி. அமெரிக்கா தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டு மத்திய கிழக்கு மோதல்களில் அதன் நேரடி ஈடுபாட்டைக் குறைக்க முயன்றது. இந்த இலக்குகள் சமரசம் செய்வது மிகவும் கடினமாக நிரூபிக் கப்பட்டது.



பின்னோக்கிப் பார்க்கும்போது, பிராந்தியத்தில் பல அமெரிக்க முடிவுகள் எதிர்வினையாற்றும் தன்மை கொண்டவை என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு அடியும் ஒரு ஒத்திசைவான புவிசார் அரசியல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக முன்வைக்கப்பட்டன, இருப்பினும் நீண்டகால விளைவுகள் உடனடி அடிவானத்திற்கு அப்பால் அரிதாகவே கணக்கிடப்பட்டன.

டொனால்ட் டிரம்ப், தனது முதல் ஜனாதிபதி பதவியின் போதும், மீண்டும் பதவியேற்ற போதும், அமெரிக்கா தனது சொந்த எல்லைகளுக்கு அப்பால் இராணுவத் தலையீடுகளைத் தவிர்க்க வேண்டும் என்று பலமுறை கூறினார். இருப்பினும், ஈரான் வேறுபட்ட சவாலை முன்வைத்தது.

தமிழில்: **ஆர்தீகன்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா நேரடியாக எதிர்கொண்ட மிகவும் சக்திவாய்ந்த நாடு ஈரான். இராணுவ வலிமை அடிப்படையில் அவசியமில்லை, ஆனால் அதன் மக்கள்தொகை எடை மற்றும் பிராந்திய செல்வாக்கின் அடிப்படையில். பிராந்திய ஒழுங்கின் அத்தகைய தூணை அகற்ற முயற்சிப்பது தவிர்க்க முடியாமல் ஆழமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.



வாஷிங்டனில், பரவலாகப் பரப்பப்பட்ட ஒரு விளக்கம், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் டொனால்ட் டிரம்பும் கடந்த ஆண்டு இறுதியில் ஈரானுக்கு எதிராக ஒரு தீர்க்கமான தாக்குதலை தொடங்க ஒப்புக் கொண்டதாகக் கூறுகிறது.

இந்தக் கண்ணோட்டத்தின்படி, இஸ்ரேலியத் தலைமை முடிவை வடிவமைப்பதில் ஒரு தீர்க்கமான பங்கைக் கொண்டிருந்தது. முன்னர் மத்திய கிழக்கில் கட்டுப்பாட்டுக் கொள்கையை ஆதரித்த டிரம்ப், அந்தக் கொள்கையிலிருந்து விலகினார். இராணுவத் தாக்குதல் உள் சரிவைத் தூண்டக்கூடும் என்று எதிர்பார்த்து, வெள்ளை மாளிகை ஈரானின் அரசியல் சூழ்நிலையை தவறாக மதிப்பிட்டதாகத் தெரிகிறது.

ஒரு பழக்கமான முறை மீண்டும் நிகழும் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால் அந்த சூழ்நிலை நிறைவேறவில்லை. அதற்கு பதிலாக, பிராந்தியம் உறுதியற்ற தன்மையில் மூழ்கியது. போர் தீவிரமடைந்தவு டன், தோல்வியின் உணர்வால் வாஷிங்டன் பின்வாங்க முடியவில்லை.

உள்நாட்டு அரசியலும் முக்கியமானவை. டிரம்பிற்கு

**தொடர்ச்சி: பக்கம் 14**

## நெருக்கடியில் 'சிலோன் டீ... தொடர்ச்சி...

அவர்கள் ஏலத்தில் புதிய தேயிலையை வாங்கும் திறனைக் குறைத்துள்ளது.இந்த நிலை நீடித்தால், தேயிலை சிறு தோட்ட உரிமையாளர்களின் வருமானம் கேள்விக்குறியாகும் அபாயம் உள்ளது.

### ஈரான் உடனான 'பண்டமாற்று' சிக்கல்

இலங்கை மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான 'எண்ணெய்க்கான தேயிலை' ஒப்பந்தம் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை தனது பழைய கடனில் சுமார் 95 சதவீதத்தை அடைத்துவிட்டது. இருப்பினும், தற்போதைய மோதல்கள் மற்றும் ஈரானுக்கு எதிரான அமெரிக்கத் தடைகள் காரணமாக புதிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் ஏற்கனவே அனுப்பப்பட்ட தேயிலைக்காக கிடைக்க வேண்டிய சுமார் 50 மில்லியன் டொலர்களை இன்னும் பெற முடியாத சூழல் உள்ளது. புதிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படாவிட்டால், ஆண்டுதோறும் 11 மில்லியன் கிலோகிராம் தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு பறிபோகும் அபாயம் உள்ளது. இந்தநிலையில் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். தொழில்துறையை பாதுகாப்பதற்கு இதன்போது சில கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்கப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. கூடுதல் சரக்கு மற்றும் காப்பீட்டுக் கட்டணங்களில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்குமாறு கோரப்பட்டுள்ளது. ஈரானிடமிருந்து வர வேண்டிய 50 மில்லியன் டொலர்களைப் பெற்றுத் தருவதற்கு அரசு உடனடியாக ராஜதந்திர ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

### அரசியல் ரீதியான அழுத்தங்களும் அமைச்சரின் உறுதிமொழியும்

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்கள் இலங்கை தேயிலைத்துறையில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்து, கடந்த சில நாட்களில் அரசியல் மட்டத்தில் பல விவாதங்களும் கருத்துக்களும் வெளியாகியுள்ளன. குறிப்பாக, பொருளாதார மீட்சிக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

தேயிலை ஏற்றுமதியில் 50% க்கும் அதிகமானவை சிறு தோட்ட உரிமையாளர்களிடமிருந்தே பெறப்படுகிறது. தேயிலை ஏலத்தில் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், தென் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள இலட்சக்கணக்கான தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளன. "அரசாங்கம் சுற்றுலாத்துறையில் காட்டும் அக்கறையை, நாட்டின் பாரம்பரிய அந்நியச் செலாவணி ஈட்டும் தேயிலைத்துறையில் காட்டவில்லை" என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கை தனது கச்சா எண்ணெய் கடனை அடைத்து வந்தது ஒரு ராஜதந்திர வெற்றியாகப் பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது நிலுவையில் உள்ள 50 மில்லியன் டொலர் தொகையைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதம், அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை மீதான விமர்சனமாக மாறியுள்ளது. ஈரான் மீதான சர்வதேசத் தடைகளுக்கு மத்தியிலும் இந்த வர்த்தகத்தை எவ்வாறு பாதுகாப்பாகத் தொடர்வது என்பதில் அரசாங்கத்திடம் தெளிவான மாற்றுத்திட்டங்கள் இல்லை என்று சில அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் மத்திய கிழக்கு மோதல்கள் குறித்து நடுநிலையான போக்கைக் கடைபிடிக்க முயல்கிறது. இருப்பினும், வர்த்தகப் பாதைகளைப் பாதுகாக்க சர்வதேசக் கூட்டணியுடன் இணைவது அவசியமா அல்லது அது அரபு நாடுகளுடனான உறவைப் பாதிக்குமா என்ற அரசியல் விவாதம் தற்போதைய தேயிலை நெருக்கடியால் மீண்டும் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில் அண்மையில் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் உள்ளிட்ட ஏனைய துறைசார் தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்த வித்யாரத்ன, ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான நிதியுதவிகளை வழங்கவும்,காப்பீட்டுத்தொகையில்சலுகைகளைவழங்கவும் அமைச்சரவை அனுமதி பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார். எனினும், திறைசேரியின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த மானியங்கள் வழங்கப்படுமா? என்பதில் பொருளாதார வல்லுநர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். 2026 ஜனவரியில் தேயிலை ஏற்றுமதி வருவாய் 5% உயர்ந்து 121.8 மில்லியன் டொலராக பதிவாகி நிதி சந்தையில் நம்பிக்கையளித்த நிலையில், மார்ச் மாதத்தில் ஏற்பட்டுள்ள இந்த இடையூறு பாரிய பின்னடைவைத் தந்துள்ளது. தேயிலைத் துறை என்பது வெறும் வர்த்தகம் மட்டுமல்ல,அது லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரமாகும். மத்திய கிழக்கில் அமைதி திரும்புவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் இலங்கை அரசாங்கம் இக்கட்டான சூழலில் இருக்கும் தேயிலைத் தொழில்துறைக்கு உதவுவதாகும். இல்லையெனில், சர்வதேசச் சந்தையில் 'சிலோன் டீ' தனது செல்வாக்கை இழக்கும் அபாயம் ஏற்படும்.

• • •

## அமெரிக்கா - ஈரான் போர் ... தொடர்ச்சி...

ஆதரவு தெரிவிக்காமல் தள்ளியே நிற்கின்றன. சைப்ரஸில் உள்ள பிரிட்டிஷ் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஈரான் நடத்தியதாகக்கூறி ஐரோப்பிய நாடுகளைப் போருக்குள் இழுக்கச் சதி நடந்தது, ஆனால் அது ஈரானின் தாக்குதல் அல்ல என்பது நிரூபிக்கப்பட்டது.

**கேள்வி :**
**இந்தப் போரின் பொருளாதாரத் தாக்கம் மற்றும் எதிர்கால நகர்வுகள் எப்படி இருக்கும்?**

**பதில் :**
இந்தப் போர் அமெரிக்காவிற்குப் பெரும் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது. ஈரானின் ஒரு ட்ரோன்(Drone) விலை 20,000 டொலர் மட்டுமே, ஆனால் அதைத் தாக்கி அழிக்க அமெரிக்கா பயன்படுத்தும் ஏவுகணையின் விலை 4 மில்லியன் டொலர்கள். இவ்வாறு ஒரு நாளைக்குச் சுமார் 1 பில்லியன் டொலர் வரை அமெரிக்கா செலவு செய்யவேண்டியுள்ளது. ஈரான் ஹோர்முஸ் ஜலசந்தியை (Strait of Hormuz) முடக்கி உள்ளதால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு ஈரான் அனுமதியளித்துள்ளது. ஈரான் தற்போது தனது தாக்குதல்களைக் குறைத்துக் கொண்டு, நீண்ட காலப்போருக்குத் தயாராகி வருகிறது. ரஷ்யாவிற்கு ஒரு வருடத்தில் 53,000 ட்ரோன்களை விற்பனை செய்யும் அளவுக்கு ஈரானிடம் ஆயுத உற்பத்தி உட்கட்டமைப்பு பலமாக உள்ளது. எனவே, அமெரிக்கா இந்தப் போரில் ஒரு உடனடி இலக்கை அடைய முடியாமல் ஆப்பசைத்த குரங்கு போலத் தவித்துக் கொண்டிருக்கிறது.

• • •

## இஸ்ரேலுடன் இராஜதந்திர ... தொடர்ச்சி...

பிரதமர் பெட்ரோ சான்செஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கான தூதர் பதவியை நீக்கும் முடிவு செவ்வாயன்று(10) அறிவிக்கப்பட்டது. இது ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் ஜோஸ் மானுவல் அல்பரேஸால் முன்மொழியப்பட்டது மற்றும் அமைச்சர்கள் குழுவின் ஆதரவுடன் இருந்தது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. நாட்டின் பணி இப்போது எதிர்காலத்தில் ஒரு பொறுப்பாளரால் வழிநடத்தப்படும் என்று அது மேலும் கூறியது.

காசாவில் ஹமாஸுக்கு எதிரான தாக்குதல்களுக்கு இஸ்ரேலுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் கப்பல்கள் மற்றும் விமானங்களைத் தடை செய்ய மாட்ரிட் எடுத்த முடிவால் தூண்டப்பட்ட இஸ்ரேலுடனான இராஜதந்திர மோதலுக்கு மத்தியில், தற்போதைய முன்னாள் தூதர் அனா மரியா சாலமன் பெரெஸ் கடந்த செப்டம்பரில் ஸ்பெயினுக்கு திரும்ப அழைக்கப்பட்டார். இந்தத் தடையை "யூத எதிர்ப்பு" என்று இஸ்ரேல் கண்டித்தது.

மோதலில் மேற்கு ஜெருசலேமின் கடுமையான அணுகுமுறையை ஸ்பெயின் பலமுறை கண்டித்துள்ளது, மேலும் பாலஸ்தீன அரசின் சுதந்திரத்தை அங்கீகரித்துள்ளது.

ஈரானுக்கு எதிரான போரை மாட்ரிட் கண்டித்தது வாஷிங்டனுடனான உறவுகளையும் சீர்குலைத்துள்ளது. தாக்குதல்களுக்கு நாட்டில் கூட்டு இராணுவ நிறுவல்களைப் பயன்படுத்த அமெரிக்கா அனுமதிக்காது என்று ஸ்பெயின் கூறியது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பை கோபப்படுத்தியது. அவர் தனது நிலைப்பாடு மற்றும் நேட்டோவின் புதிய பாதுகாப்பு செலவின இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5சூ ஐ அடையத் தவறியதற்காக ஸ்பெயினுடனான அனைத்து வர்த்தகத்தையும் துண்டிப்பதாக அச்சுறுத்தினார்.

பொது அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான உறவுகள் "சாதாரணமாக" உள்ளன, என்று அல்பரேஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.






## அணு ஆயுதங்கள் ... தொடர்ச்சி...

உள்நாட்டில் செல்வாக்கு மிக்க அரசியல் தொகுதிகளின் ஆதரவு தேவைப்பட்டது. பல அமெரிக்க சுவிசேஷகர்களுக்கு, இரண்டாம் வருகையின் பைபிள் கதையுடன் தொடர்புடைய தளமாக இஸ்ரேல் ஆழ்ந்த மத முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், டிரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர் ஒரு முக்கியமான தனிப்பட்ட செல்வாக்குள்ளவராக இருந்தார். அவர் நீண்ட காலமாக இஸ்ரேலிய அரசியல் வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளார்.

இதன் விளைவாக அமெரிக்காவை மோதலில் ஆழமாகத் தள்ளிய அரசியல் அழுத்தங்களின் ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. நீண்ட காலமாக, மேற்கு ஆசியாவில் ஒரு புதிய பிராந்திய கட்டமைப்பு உருவாகலாம். அத்தகைய ஒழுங்கின் இரண்டு தூண்கள் ஏற்கனவே தெரியும்.

முதலாவது, பிராந்தியம் முழுவதும் இஸ்ரேலின் இராணுவ ஆதிக்கம். இரண்டாவது, இஸ்ரேலுக்கும் வளைகுடா முடியாட்சிகளுக்கும் இடையிலான நிதி மற்றும் பொருளாதார உறவுகளை ஆழப்படுத்துவதை உள்ளடக்கும், இந்த ஏற்பாடுகளிலிருந்து அமெரிக்கா கணிசமாக பயனடையும்.

துருக்கி சுயாதீனமாக உள்ளது. இருப்பினும், நேட்டோ உறுப்பினராக, மேற்கத்திய செல்வாக்கு கட்டமைப்புகளுடன் ஓரளவு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. பரந்த பிராந்திய மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக அங்காராவுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து இஸ்ரேலிய மூலோபாயவாதிகள் ஏற்கனவே விவாதித்து வருகின்றனர்.

இஸ்லாமிய குடியரசின் தலைமையின் அரசியல் மற்றும் இராணுவ செல்வாக்கை அழிப்பது டெல் அவிவில் ஒரு வெற்றியாகக் கருதப்படும். இருப்பினும், ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தில் ஈரான் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டாலும், மையக் கேள்வி பதிலளிக்கப்படாமல் இருக்கும்.

### அடுத்து என்ன நடக்கும்?

2003 இல் ஈராக்கின் முன்னுதாரணமானது பெரியதாகத் தெரிகிறது. வாஷிங்டன் வெற்றியை அறிவித்த பின்னரே அங்கு மிகவும் கடுமையான சவால்கள் எழுந்தன. அரசு நிறுவனங்களின் சரிவு பல வருட குழப்பத்தை உருவாக்கியது.

வாஷிங்டனில் உள்ள சிலர், ஈரான் சிரிய பாணியிலான சூழ்நிலையைப் பின்பற்றலாம் என்று நம்புகிறார்கள், அங்கு அசாத் குடும்பத்தின் வீழ்ச்சி இறுதியில் வெளிப்புற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய ஒரு அரசாங்கத்தை உருவாக்கியது. ஆனால் அந்த விளைவு ஓரளவு சூழ்நிலைகள் மற்றும் தற்செயலின் விளைவாகும். ஈரான் மிகப் பெரிய மற்றும் சிக்கலான நாடு.

இந்தப் போரின் பரந்த தாக்கங்கள் மத்திய கிழக்கிற்கு அப்பால் நீண்டுள்ளன. முதலாவதாக, சர்வதேச சட்ட விதிமுறைகளின் வீழ்ச்சி ஒரு புதிய கட்டத்தை எட்டியுள்ளது. 2003 இல் ஈராக் படையெடுப்பிற்கு முன்பே, அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகள் உட்பட ஓரளவு சர்வதேச ஒப்புதலை நாடியது.

இன்று இதுபோன்ற நடைமுறைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. டிரம்ப் நிர்வாகம் சர்வதேச நிறுவனங்களை இரண்டாம் நிலை அல்லது பொருத்தமற்றதாகக் கருதுகிறது.

சர்வதேச அரசியலில் பலத்தைப் பயன்படுத்துவது புதியதல்ல. ஆனால் தற்போதைய தருணத்தை வேறுபடுத்துவது உலகளாவிய ஒழுங்கின் முதன்மை கருவியாக அதிகாரத்தை வெளிப்படையாகக் கொண்டாடுவதாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்கள் செயல்களை சர்வதேச சட்டத்தின் மூலம் அல்ல, மாறாக தேவை மற்றும் வலிமையின் தர்க்கத்தின் மூலம் அதிகளவில் நியாயப்படுத்துகின்றன.

மற்றொரு முன்னுதாரணமும் அமைக்கப்பட்டுள்ளது. ஈரானின் உச்சத் தலைவரையும் முக்கிய இராணுவ பிரமுகர்களையும் நீக்கிய இஸ்ரேலின் தாக்குதல், இலக்கு வைக்கப்பட்ட கொலைகளின் நடைமுறையில் வியத்தகு அதிகரிப்பைக் குறிக்கிறது.

இத்தகைய தந்திரோபாயங்கள் முன்னர் முதன்மையாக போராளிக் குழுக்களின் தலைவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நாட்டுத் தலைவர்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவது விளையாட்டின் விதிகளை மாற்றுகிறது.

அமெரிக்க அல்லது இஸ்ரேலிய அழுத்தத்தின் சாத்தியமான இலக்குகளாக தங்களைக் கருதும் நாடுகளுக்கு, படிப்பினைகள் தெளிவாக உள்ளன. அணு ஆயுதங்களை வைத்திருப்பது இனி ஒரு தடுப்பாக மட்டும் பார்க்கப்படாமல், அரசியல் உயிர்வாழ்வதற்கான உத்தரவாதமாக பார்க்கப்படலாம்.

சர்வதேச உறவுகளுக்கான டிரம்பின் பரந்த அணுகுமுறை இந்தப் போக்கை வலுப்படுத்துகிறது. பலதரப்பு நிறுவனங்களைத் தவிர்த்து, தனிப்பட்ட நாடுகளுடன் நேரடியாகக் கையாள்வதே அவரது விருப்பம். இத்தகைய இருதரப்பு மோதல்களில், சீனாவைத் தவிர கிட்டத்தட்ட அனைவரையும் விட தனக்கு நன்மை இருப்பதாக வாஷிங்டன் நம்புகிறது. மேலும், குறைந்த அளவிற்கு, ரஷ்யா. இதன் விளைவாக, பல நாடுகள் தங்கள் சொந்த இராணுவத் திறன்களை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்றன. அதை எதிர்ப்பதற்கான வழிமுறைகள் இல்லாமல் அவர்கள் ஒருபோதும் வெளிப்புற அழுத்தத்தை எதிர்கொள்ள மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த அவர்கள் முயல்கின்றனர்.

இருப்பினும், சர்வதேச ஒத்துழைப்பின் தொடர்ச்சியான முறிவு இறுதியில் அனைவருக்கும் அதிக உறுதியற்ற தன்மையை உருவாக்கும். வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை நிவர்த்தி செய்வதற்கான மிகவும் பயனுள்ள வழி, பரஸ்பர பாதுகாப்பு மற்றும் பகிரப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்ட கூட்டு நடவடிக்கையாகும்.

தற்போதைய புவிசார் அரசியல் சூழலை அத்தகைய ஒத்துழைப்பு தக்கவைக்க முடியுமா என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது, ஆனால் அது முற்றிலுமாக மறைந்து விட்டால், புதிய ஒன்றை உருவாக்குவதை விட தற்போதுள்ள சர்வதேச உறவுகளின் அமைப்பை அகற்றுவது மிகவும் எளிதானது என்பதை உலகம் விரைவில் கண்டறியக்கூடும்.

**நன்றி ரஸ்யா ருடே**

## ஈரானுக்கு எதிரான ... தொடர்ச்சி...

ஹோர்முஸ் நீரிணையில் இந்தியாவுக்குச் சென்ற தாய்லாந்து நாட்டின் மயூரி நரீ என்ற கப்பல் தாக்கப்பட்டதாக அந்நாட்டு கடற்படை புதன்கிழமை(11) தெரிவித்துள்ளது. அந்தக் கப்பலில் இருந்து 20 மாலுமிகளைக் காப்பாற்றியுள்ளது ஓமன் கடற்படை.

"இந்த மோதலின் ஆரம்ப கட்டத்தில் இதுபோன்ற பல தாக்குதல்களில் இந்திய குடிமக்கள் உட்பட விலைமதிப்பற்ற உயிர்கள் ஏற்கனவே இழக்கப்பட்டுள்ளன என்று இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

160க்கும் மேற்பட்ட சிறுமிகளைக் கொன்ற பள்ளியின் மீதான தாக்குதலுக்கோ அல்லது உச்ச தலைவர் அயதுல்லா கமேனியின் படுகொலைக்கோ புது தில்லி இதுவரை அமெரிக்காவையும் இஸ்ரேலையும் கண்டிக்கவில்லை. போர் தொடங்கியதிலிருந்து ஜெய்சங்கர் தனது ஈரானிய சகா அப்பாஸ் அரக்சியுடன் மூன்று முறை உரையாடியுள்ளார்.

## ஐந்து மாதங்களில் ... தொடர்ச்சி...

செய்வதற்கான அதிக வட்டி செலுத்துதல்களும், அமெரிக்க போர்த் துறை உட்பட அதிகரித்த அரசாங்க செலவினங்களும் அடங்கும்.

ஐந்து மாதங்களில், பொதுக் கடனுக்கு சேவை செய்ய கருவூலம் மொத்தம் 433 பில்லியன் டொலர்களை ஒதுக்கியது, இது இப்போது 38.9 டிரில்லியனை நெருங்குகிறது.

இரு கட்சி நிதி கண்காணிப்பு அமைப்பான பொறுப்பான கூட்டாட்சி பட்ஜெட்டுக்கான குழுவின் (CRFB) தலைவர் மாயா மெக்குனியாஸ், "இது நிலையானதாக இருக்க முடியாது" என்று எச்சரித்துள்ளார். கொள்கை வகுப்பாளர்களிடம் பற்றாக்குறையைக் குறைக்குமாறு அவர் அழைப்பு விடுத்தார், ஆரம்ப இலக்காக 3% பற்றாக்குறை-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை முன்மொழிந்தார்.

அதன் சமீபத்திய அறிக்கையில், அமெரிக்கா "முன்பு இருந்ததை விட அதிக கடன்பட்ட அடுத்த அதிர்ச்சியில் நுழைவது கிட்டத்தட்ட உறுதி" என்று சிந்தனைக் குழு கூறியது.

இதற்கிடையில், செவ்வாயன்று, பெயர் குறிப்பிடாத அதிகாரிகளை மேற்கோள் காட்டி, அமெரிக்க இராணுவம் ஈரான் மீதான தாக்குதல்களின் முதல் இரண்டு நாட்களில் மட்டும் 5.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள வெடிமருந்துகளை ஏவியதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டது. செய்தித்தாளின் படி, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் வரும் நாட்களில் காங்கிரசுக்கு ஒரு துணை பாதுகாப்பு பட்ஜெட் கோரிக்கையை அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 50 பில்லியன் டொலர்கள் வரை உயரக்கூடும் என்று கூறப்படுகிறது.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





